بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ     نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ     وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 17

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

9 ஷஃபான் 1439 ஹிஜ்ரி கமரி   26 ஷஹாதத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
26 ஏப்ரல் 2018


## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا
كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا رَزَقْنٰكُمْ
وَاشْكُرُوْا لِلّٰهِ اِنْ كُنْتُمْ اِيَّاهُ تَعْبُدُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையான பொருள்களிலிருந்து உண்ணுங்கள். நீங்கள் (உண்மையில்) அல்லாஹ்வைத்தான் வணங்குகின்றீர்களென்றால் அவனுக்கு நன்றி பாராட்டுங்கள்.

(அதிகாரம் அல் பக்கரா : 173)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இந்த உணவு உமக்காகவும் உம்முடன் இருக்கின்ற தர்வேஷ்களுக்காகவும் உரியதாகும் என்று வானவர் கூறியிருந்தது போன்றே கருணைமிக்க இறைவன் எனக்கும் என்னுடன் இருக்கின்ற தர்வேஷ்களுக்கும் ஒவ்வொரு நாளும் தன் தரப்பிலிருந்து இந்த விருந்தை அனுப்புகின்றான். எனவே, ஒவ்வொரு நாளும் அவனது புதிய விருந்து எங்களுக்கு ஒரு புதிய அடையாளமாக இருக்கின்றது.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**120 -வது அடையாளம்:** லாஹூரிலுள்ள அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் தொடர்பாக இறைவன் எனக்காக ஓர் அடையாளத்தை வெளிப்படுத்தி இருந்தான். இந்த அடையாளத்தின் முதல் சாட்சியாக பத்ர் பத்திரிகையின் ஆசிரியரான முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் இருக்கின்றார்கள். எனவே, அவர்களின் கைகளால் எழுதப்பட்ட கடிதம் சாட்சியாக கீழே தரப்படுகின்றது. அக்கடிதம் இதுவாகும்:

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ எங்களது போதகரும் வழிகாட்டியும் ஆகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியும் ஆகிய ஹஸ்ரத் அக்தஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு.

மேலான பெருந்தகையே! எனக்கு தெரிந்தவற்றை உங்களுக்கு தெரிவிக்கின்றேன். அதாவது, உம்முஹாத்துல் முஃமினீன் என்ற நூல் கிறித்தவர்கள் தரப்பிலிருந்து 1898 -ல் வெளியிடப்பட்டபோது லாஹூரிலுள்ள அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாமின் உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் இந்த கருத்தையுடைய விண்ணப்பத்தை அனுப்பியிருந்தனர். அதாவது, இந்த நூல் வெளியிடப்படுவதற்கு தடை விதிக்க வேண்டும். மேலும், இத்தகைய மோசமான நூலை எழுதிய அதன் நூலாசிரியரிடம் விசாரணை நடத்த வேண்டும் என்று அதில் எழுதப்பட்டிருந்தது. இந்த நாட்களில் இந்த எளியவன் லாஹூரில் Accountant General அலுவலகத்தில் வேலை செய்து வந்தேன். ஒரு ருக்ஸதானா நிகழ்ச்சியின்போது ஒரு சில நாட்களுக்காக காதியான் வந்திருந்தேன். அப்போது ஹுஸூர் அவர்களிடம் அஞ்சுமனை சார்ந்திருப்பவர்களது விண்ணப்பம் தொடர்பாக கூறப்பட்டது. எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது. ஹுஸூர், பல நபர்களுடன் அவர்களில் ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் M.A அவர்களும் இருந்தார்கள். அந்த நபர்களுடன் அன்னார் தோட்டத்தின் பக்கம் உலாவுவதற்காக சென்று கொண்டிருந்தார்கள். அப்போது ஹுஸூர் அவர்கள் அஞ்சுமன் செய்த இந்த விஷயம் சரியல்ல. நாம் இந்த விண்ணப்பத்தை கடுமையாக எதிர்ப்பவர்களாக இருக்கின்றோம் என்று கூறினார்கள். ஆகவே, ஹுஸூர் அவர்கள் தமது எதிர்ப்பை விண்ணப்பத்தின் வடிவில் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்து தனது எழுத்தின் மூலம் தெரிவித்தார்கள். அதனை 4 மே 1898 -ல் தெளிவாக வெளியிடவும் செய்தார்கள். அதை பார்த்த அஞ்சுமனைச் சார்ந்தவர்கள் மிகவும் கூச்சலிட்டனர். பத்திரிகைகளில் ஹுஸூருக்கு எதிராக கட்டுரை வெளியிட்டனர். இதே நாட்களில் ஹுஸூர் வெளியில் உலாவுவதற்காக சென்றபோது நமக்கு லாஹூரிலுள்ள அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாமின் இந்த நடவடிக்கை தொடர்பாக سَتَذْكُرُوْنَ مَاۤ اَقُوْلُ لَكُمْ وَاُفَوِّضُ اَمْرِيْۤ اِلَى اللّٰهِ என்று இல்ஹாம் வந்தது என்று கூறினார்கள்.

அதன் மொழியாக்கம் மற்றும் அதை பற்றி, தான் புரிந்ததை ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: விரைவில் அஞ்சுமனை சார்ந்திருப்பவர்கள் இந்த வழிமுறையைக் கடைபிடிப்பதில் தோல்வி இருக்கின்றது என்று நான் கூறியதை நினைத்துப் பார்ப்பார்கள். மேலும், எந்த வழிமுறையை நாம் கடைபிடித்துள்ளோமோ அதாவது எதிரிகளின் ஆட்சேபனைகளை மறுப்பது மற்றும் அவற்றிற்கு பதில் கூறுவது என்ற இந்த விஷயத்தை நான் இறைவனிடம் ஒப்படைக்கின்றேன். அதாவது, இறைவன் எனது பணிகளை பாதுகாப்பவனாக இருக்கின்றான். ஆனால் உம்மஹாத்துல் முஃமினீன் என்ற நூலின் ஆசிரியருக்கு தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்ற தங்களது எண்ணத்தில் அஞ்சுமனைச் சார்ந்திருப்பவர்களுக்கு ஒருபோதும் வெற்றி கிடைக்காது. அது நடப்பதற்கு முன்னதாகவே கூறப்பட்டதே உண்மையாகவும் சரியானதாகவும் இருந்தது என்பது பின்னர் அவர்களுக்கு நினைவில் வரும் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். நான் இந்த இல்ஹாம் கேட்டு ஒன்று அல்லது இரண்டு நாட்கள் கழிந்த பிறகு லாஹூருக்கு திரும்பிச் சென்ற சமயத்தில் வழக்கம் போல் லாஹூரிலுள்ள கும்டி கடைவீதியிலுள்ள பள்ளிவாயிலில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அந்த கூட்டத்தில் இந்த எளியவன் எனது காதியான் பயணம் தொடர்பான அறிக்கையை கூற வேண்டியது இருந்தது. அதற்கு ஏற்ப ஹுஸூர் அவர்களின் இந்த இல்ஹாமும் அதற்கான விளக்கமும் அங்கு ஒரு பெருங்கூட்டத்திற்கு கூறப்பட்டது. நான் அதை கூறி முடித்தவுடன் ஒரு நபர் அஞ்சுமனிற்கு லெஃப்டினென்ட் கவர்னர் தரப்பிலிருந்து பதில் வந்து விட்டது. அவர்களது விண்ணப்பம் மறுக்கப்பட்டு விட்டது. மேலும் உம்முஹாத்துல் முஃமினீன் என்ற நூலின் ஆசிரியர் எந்தவொரு சட்டத்தின் தண்டனையின் கீழும் வர முடியாது என்ற செய்தியை தெரிவித்தார். அப்போது இந்த செய்தியைக் கேட்டது கூட்டத்திலிருந்த எல்லா பார்வையாளர்களின் ஈமான் அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தது. எல்லாரும் இறைவனின் வியக்கத்தக்க பணிகளைப் பார்த்து அவனை புகழ்ந்தனர். (இதனை எழுதியவன்) ஹுஸூர் அவர்களின் மிகவும் தாழ்மையான அடியானான முஹம்மது ஸாதிக் ஆவேன்.

**121 -வது அடையாளம்:** 4 ஏப்ரல் 1905 -ல் பூகம்பம் ஏற்பட்ட சமயத்தில் இறைவன் புறமிருந்து, இந்த பூகம்பமுடன் நின்று விடாது. இன்னும் பூகம்பங்கள் வரும் என்று எனக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது. எனவே நான் தோட்டத்தில் மனைவி மக்களுடனும் பிள்ளைகளுடனும் எனது ஜமாஅத்திலுள்ள பெரும்பாலான மக்களுடனும் செல்வதை பொருத்தமாகக் கருதியதால் அங்கு சென்றேன். அங்கு ஒரு பெரும் மைதானத்தில் இரண்டு கூடாரங்களை அமைத்து அங்கு நாங்கள் தங்கி வந்தோம். இதே நாட்களில் எனது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டனர். எல்லா நேரத்திலும் காய்ச்சல் அவர்களை விட்டு பிரியாமல் இருந்தது. அத்துடன் இருமலும் இருந்தது. ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் அவர்கள் அவர்களுக்கு சிகிச்சையும் அளித்து வந்தார்கள். ஆனால் பலன் கிடைப்பதை உணர முடியாமல் இருந்தது. எதுவரையென்றால் நிற்கவும் அமரவும் கூட அவர்களால் முடியாத நிலை ஏற்பட்டது. அவர்களை பெண்கள் கட்டிலில் அமர வைத்து மாலை நேரத்தில் கூடாரத்திற்கு கொண்டு சென்றனர். காலையில் கட்டிலில்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**கண்ணியத்திற்குரிய சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வுக்கு ஒளிமிக்க ஆதாரமாக விளங்கினார்கள். எவர் சஹாபாக்களை கண்ணியப்படுத்துவதில்லையோ அவர் ஒருபோதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கண்ணியப்படுத்துவதில்லை. கண்ணியத்திற்குரிய சஹாபாக்களின் தூய ஜமாஅத் தமது நபி (ஸல்) அவர்களை விட்டு ஒருபோதும் விலகியதில்லை. அவ்வழியில் உயிரை தருவதற்கும் அவர்கள் தயங்கியதில்லை. அம்மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதில் எந்த அளவுக்கு மூழ்கி விட்டார்கள் என்றால், அதற்காக அவர்கள் ஒவ்வொரு கஷ்டத்தையும் எல்லா நேரமும் சுமக்கத் தயாராக இருந்தனர்.**

**இதுவே சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் உடைய அந்தஸ்து ஆகும். இதனை ஒவ்வோர் அஹ்மதியும் தம் முன் நிறுத்திக் கொள்ள வேண்டும். நாம் சஹாபாக்களின் வாழ்வைப் படிக்கும்போது, அவர்களின் செயல் முன்மாதிரியை அறிவும்போதுதான் அவர்களின் முக்கியமான தகுதி தெரிய வரும். அந்த அந்தஸ்து நமக்கு ஒரு விஷயத்தை நினைவுபடுத்த வேண்டும். அதாவது, அவர்களின் வாழ்வு, பணிகள், இறைவணக்கம், கட்டுப்படுதல் ஆகியவற்றின் தரம் நமக்கு ஒரு முன்மாதிரியாகும். நாம் அதனை நமது வாழ்வின் அங்கமாக்க முயற்சி செய்ய வேண்டும்.**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில சஹாபாக்களான ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி), ஹஸ்ரத் முஹம்மது பின் முஸைலமா (ரலி), ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி), ஹஸ்ரத் மஆஸ் (ரலி), ஹஸ்ரத் முஅவ்வஸ் ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன் ஆகியோரின் புகழத்தக்க நற்பண்புகள் பற்றி ஈமானுக்கு எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.**

**கானாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய அல்ஹாஜ் இஸ்மாயீல் பி.கே. ஆடு சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் உருது வகுப்புகளில் படா பச்சா (பெரிய குழந்தை) என்ற பெயரில் அனைவராலும் அறியப்பட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**16 மார்ச் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **16 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ . اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பதில் சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அவர்களின் அந்தஸ்து பற்றி கூறினார்கள். கண்ணியத்திற்குரிய சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வுக்கு ஒளிமிக்க ஆதாரமாக விளங்கினார்கள். எந்த ஒரு மனிதர் இந்த ஆதாரத்தை வீணாக்குகிறாரோ அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடைய நுபுவ்வத்தை அழிக்க நினைக்கிறார். சஹாபாக்களை மதிக்கக் கூடியவரே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாக மதிக்கிறார். எவர் சஹாபாக்களை கண்ணியப் –படுத்துவதில்லையோ அவர் ஒருபோதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கண்ணியப் –படுத்துவதில்லை. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டுள்ளேன் என்று அவர் கூறினால் அந்த வாதத்தில் அவர் பொய்யர் ஆவார். ஒருவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பும் இருக்கிறது. ஆனால் சஹாபாக்கள் மீது விரோதம் இருக்கிறது என்பது ஒருபோதும் முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 278; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அன்னார் கூறினார்கள்: கண்ணியத்திற்குரிய சஹாபாக்களின் தூய ஜமாஅத் தமது நபி (ஸல்) அவர்களை விட்டு ஒருபோதும் விலகியதில்லை. அவ்வழியில் உயிரை தருவதற்கும் அவர்கள் தயங்கியதில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: அம்மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதில் எந்த அளவுக்கு மூழ்கி விட்டார்கள் என்றால், அதற்காக அவர்கள் ஒவ்வொரு கஷ்டத்தையும் எல்லா நேரமும் சுமக்கத் தயாராக இருந்தனர். எப்போதும் தயாராக இருந்தனர். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 277; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) இதுவே சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் உடைய அந்தஸ்து ஆகும். இதனை ஒவ்வோர் அஹ்மதியும் தம் முன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் சஹாபாக்களின் வாழ்வைப் படிக்கும் போது, அவர்களின் செயல் முன்மாதிரியை அறிவும்போதுதான் அவர்களின் முக்கியமான தகுதி தெரிய வரும். அந்த அந்தஸ்து நமக்கு ஒரு விஷயத்தை நினைவுபடுத்த வேண்டும். அதாவது, அவர்களின் வாழ்வு, பணிகள், இறைவணக்கம், கட்டுப்படுதல் ஆகியவற்றின் தரம் நமக்கு ஒரு முன்மாதிரியாகும். நாம் அதனை நமது வாழ்வில் அங்கமாக முயற்சி செய்ய வேண்டும்.

நான் சஹாபாக்களின் சில சம்பவங்களை எடுத்து வைப்பேன். ஒரு சஹாபி அபூ தஜானா என்ற அன்ஸாரி சஹாபி. இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வரும் முன்பே ஈமான் கொண்டு விட்டார். மதீனாவைச் சேர்ந்தவர். அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர் போரில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்திருந்தது. மிகவும் தைரியத்தைக் காட்டினார்கள். அதுபோன்று இவருக்கு உஹத் போரிலும் பங்கெடுக்கும் வாய்ப்பு கிடைத்திருந்தது. யுத்தத்தின் நிலைமை மாறிய போது அதாவது முஸ்லிம்கள் முதலில் வெற்றி பெற்றார்கள். ஓரிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த –வர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றதன் விளைவால் காஃபிர்கள் மீண்டும் தாக்குதல் தொடுத்தனர். முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தத்தின் நிலை ஆகியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனிருந்த சஹாபாக்களுள் ஹஸ்ரத் அபூ தஜானாவும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அவர்கள் கடும் காயத்திற்குள்ளானார். ஆனால் காயங்கள் ஏற்பட்டும் அவர் பின்தங்கவில்லை. (மேரா சஹாபா தொகுதி 3 பக்கம் 207; ஹஸ்ரத் அபூதஜானா அன்ஸாரி. கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் 2004 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

இந்த சம்பவம் குறித்து அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வாளை உயர்த்தி அவ்விடத்தில் கூறினார்கள்: எவர் இன்று இந்த வாளின் உரிமையை நிறைவேற்றுவார்? அப்போது அபூ தஜானா அன்ஸாரிதான் முன் வந்தார். நான் இந்த வாளின் உரிமையை நிறைவேற்றுவதற்காக உறுதி தருகிறேன் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது உறுதியைப் பார்த்து அவரிடம் வாளைத் தந்தார்கள். பிறகு அன்னார் மீண்டும் வீரத்துடன், யா ரஸூலல்லாஹ்! இந்த வாளின் உரிமையை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும்? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த வாள் எந்த முஸ்லிம் உடைய இரத்தத்தையும் சிந்தாது. மேலும், பிற காஃபிர்களில் உள்ள எதிரிகள் இதனிடமிருந்து தப்பவும் முடியாது. (சஹீஹ் முஸ்லிம். கிதாப் ஃபஸாயிலுஸ் ஸஹாபா பாபு மின் ஃபஸ்லி அபூதஜானா ஹதீஸ் 6553. கன்ஸுல் உம்மால் தொகுதி 4 பக்கம் 339 ஹதீஸ் 10792) அதாவது, எதிர்ப்பு செலுத்தும் காஃபிர்கள், முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தம் செய்பவர்கள் ஆகியோருக்கு எதிராகவே இந்த வாளை பயன்படுத்த வேண்டும். அன்னார் அந்த வாளை வாங்கிக் கொண்டு யுத்தக் களத்துக்கு வீறுநடை போட்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சாதாரண காலங்களில் பெருமையைக் காட்டுகின்ற இந்த

வெளிப்பாடுகள் அல்லாஹ்வுக்குப் பிடித்தமானவை அல்ல. ஆனால், இன்று யுத்தத்தில் அபூ தஜானாவின் இந்த வீறுநடை அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்து விட்டது. (அஸதுல் கஅபா தொகுதி 6 பக்கம் 93. அபூதஜானா பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

யமாமா போரில் மஸ்லமா கஸ்ஸாபுக்கு எதிராக யுத்தம் செய்யும்போது அன்னார் ஷஹாதத்தைப் பெற்றார்கள். அன்னார் மிகவும் தைரியமாக கோட்டைக் கதவுகளைத் திறப்பதற்காக தமது உடனிருந்தவர்களிடம் என்னை சுவருக்கு அப்புறத்தில் எறிந்து விடுங்கள் என்றார்கள். மிக உயரமான சுவரின்ன் அப்புறத்தில் அவர் வீசப்பட்டார். அதனால் அவரது காலும் முறிந்தது. இருந்த போதும் மிகவும் தைரியமாக சண்டையிட்டவாறு கோட்டையின் கதவைத் திறந்தார்கள். முஸ்லிம்கள் உள்ளே நுழைந்தனர். இது மிகவும் வியத்தகு தைரியமாகும். எவ்வாறிருப்பினும் அவ்வாறு சண்டையிட்டவராக அங்கே ஷஹீத் ஆகி விட்டார். (அஸதுல் கஅபா தொகுதி 2 பக்கம் 551. சமாக் பின் ஹர்ஷா. பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஒருமுறை நோயுற்றிருந்தபோது தமது நண்பரிடம் கூறினார்கள்: ஒருவேளை என் இரண்டு அமல்களை அல்லாஹ் ஒப்புக் கொள்வான் என நினைக்கிறேன். ஒன்று, நான் வீண் பேச்சுகள் பேசுவதில்லை; புறம் பேசுவதில்லை. மக்களுக்குப் பின்னால் பேசுவதில்லை. இரண்டாவது, எந்த ஒரு முஸ்லிமைக் குறித்தும் என் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி இருந்ததில்லை. (அத்திகாபுல் குப்ரா லிஇப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 420 பாபு அபூதாஜனா (ரலி). பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1990 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

பிறகு முஹம்மது முஸ்லமா குறித்து வருகிறது. இவரும் தொடக்ககால அன்ஸாரி முஸ்லிம்களில் ஒருவராக இருந்தார்கள். இவரும் மிகவும் தைரியமும் அச்சமின்மையும் உள்ளவராக இருந்தார். உஹது போரில் முஹம்மது பின் முஸ்லமா அவர்கள் மிகவும் தைரியத்துடனும் உறுதியான பாதத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்திருந்தார்கள். இவர்களுக்கு உரிய ஓர் சிறப்பம்சம் இவர்கள் விஷயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒரு முன்னறிப்பு நிறைவேறியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவரிடம் தனது வாளை கொடுத்து கூறினார்கள். எப்போது இணைவைப்பவர்களுடன் நீர் யுத்தம் செய்வீரோ அப்போது வரை இந்த வாளை வைத்து சண்டை இடுவீராக. பிறகு முஸ்லிம்கள் தமக்குத் தாமே சண்டையிடும் காலம் வந்து விட்டால் இந்த வாளை உடைத்து விட வேண்டும். நீர் வீட்டில் இருந்து கொள்ள வேண்டும். உம்மீதே தாக்குதல் நடந்தாலும் சரி, அல்லது உமக்கு மரணம் வந்தாலும் சரி என்று கூறினார்கள். அவர் இந்த போதனைப்படி அமல் செய்தார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய ஷஹாதத்திற்குப் பிறகு இதனை அன்னார் அமல் செய்தார். அதாவது அன்னார் செயலளவில் அந்த வாளை உடைத்து விட்டார்கள். மரத்தாலான வாள் ஒன்றை தயார் செய்து கொண்டார்கள் அதனை தொங்க விட்டுக் கொண்டார்கள். இதனால் என்ன பயன் என்று ஒருவர் கேட்டார். அதற்கு இதில் என்ன ஞானம் என்னவெனில், ஒரு திகில் இதனால் நிலை நிற்கும் என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளையையும் நிறைவேற்றி விட்டேன். இப்போது நான் இரும்பு வாளை வைத்துக் கொள்ள மாட்டேன். மர வாள் யாருக்கும் தீங்கிழைக்காது என்று கூறினார்கள். சில ஸஹாபா கூறினர். குழப்பத்தின் தாக்கம் இவர்களின் மேல் உண்டாகவில்லை. அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய ஷஹாதத்துக்கு பிறகு முஸ்லிம்களிடம் குழப்பம் ஏற்பட்டபோது அதன் தாக்கம் ஏற்படாதவராக ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா இருந்தார்கள். அன்னார் குழப்பத்தில் இருந்து தப்புதவற்காக ஒரு பாழடைந்த இடத்தில் சென்று தங்கினார்கள். அந்த குழப்பம் முடியும் வரை இந்த பாழடைந்த இடத்திலேயே வாழ்ந்து விட்டுப் போக வேண்டும் என்பதே எனது விருப்பம் என்றார். (அத்திகாபுல் குப்ரா லிஇப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 338-340. பாபு முஹம்மது பின் முஸைலமா (ரலி). பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1990 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது) அந்த மக்கள் யுத்தம் செய்தது மார்க்கத்தின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டதற்காக – ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதற்காக – அதாவது இணை வைப்பவர்கள் மார்க்கத்தை அழிக்க யுத்தம் செய்தால் அவர்களுடன் யுத்தம் செய்யுங்கள் என்று கூறினார்கள். முஸ்லிம்கள் அதில் நிலை நிற்கும் வரை ஆற்றலும் அவ்வாறே நிலைநின்றது. அவர்கள் வெற்றி பெற்று வந்தனர். தங்களுக்குள் சண்டையிட ஆரம்பித்ததும் நயவஞ்சகங்களின் சொல் கேட்டு ஒருவர் மற்றவரின் கழுத்தை வெட்டிய போது ஆட்சி அவர்களிடம் இருந்து போய்விட்டதோடு மட்டுமின்றி ஒருமைப்பாடும் இல்லாமல் போய் விட்டது. பிறகு சிறிது சிறிதாக ஆட்சி அதிகாரங்களும் போய் விட்டன. இன்று நாம் பார்க்கிறோம். முஸ்லிம்களின் சண்டை அதன் உச்ச நிலையில் இருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இன்னொரு முன்னறிவிப்பும் உள்ளது. அதுவும் நிறைவேறி விட்டது. இருள் நிறைந்த காலத்திற்குப் பிறகு ஒளியின் காலம் வரும். மஸீஹ் மவ்வூதின் காலம் வரும். மஸீஹ் மவ்வூதை அப்போது ஏற்றுக் கொள்ள வேண்டும். ஜமாஅத்துடன் இணைய வேண்டும். அதில்தான் பரக்கத் உள்ளது. ஆனால் வந்த அவரை ஏற்காமல் முஸ்லிம்கள் தமது நாட்டுக்குள்ளேயே ஒருவர் மற்றவரின் மீது இரத்த தாகம் கொண்டவராக இருக்கின்றனர். விளைவு இன்று முஸ்லிம் அல்லாத உலகம் முஸ்லிம்கள் மீது ஆட்சி செய்கிறது.

ஹஸ்ரத் முஹம்மது முஸைலமாவின் தெளிவான கருத்தின் அடிப்படையில் கட்டுப்படுதல் அவர்களிடம் இருந்தது. இந்த அடிப்படையில் கலீஃபாக்களும் அவரை மிகவும் நம்பினர். குறிப்பாக ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) இருவரும் முக்கியமான சில பணிகளை இவரிடமே ஒப்படைப்பார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சில புகார்கள் வந்தபோது நிர்வாகத்தில் இருப்பவர்கள் மீது மற்றவர்களிடம் இருந்து புகார் வரும்போது அதனை விசாரித்து கண்டறிவதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமாவை அனுப்பி வைப்பார்கள். (அத்திகாபுல் குப்ரா லிஇப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 47. திக்ருல் மிஸ்ரி பய்ன வ ஹஸ்ரி உஸ்மான் (ரலி). பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1990 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

இன்னொரு ஆரம்பகால சஹாபி அபூ அய்யூப் அன்ஸாரி. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வரும்போது அன்னாருக்கு விருந்தோம்பல் செய்யும் வாய்ப்பைப் பெற்ற சஹாபியாக இவர் இருந்தார். ஒவ்வொருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டுக்கு வர வேண்டும் என்று விரும்பினர். ஒவ்வொருவரும் தமது கருத்தை வெளிப்படுத்தவும் செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனது பெண் ஒட்டகத்தை விட்டு விடுங்கள். அல்லாஹ் விரும்பிய இடத்தில் அது நிற்கும். அபூ அய்யூப் அன்ஸாரி உடைய நற்பேறு. அன்னாரது வீட்டின் முன் ஒட்டகம் நின்று விட்டது. இருந்தும் மக்களுக்கு ஆறுதல் ஏற்படவில்லை. எங்கள் வீடும் அருகில் தான் உள்ளது. எங்களுடன் வந்து தங்குவார்கள் என்று கூறியவண்ணம் இருந்தனர். உடனே அன்னார் சீட்டு குலுக்கியும் போட்டார்கள். அதிலும் கூட அபூ அய்யூப் அன்ஸாரியின் பெயரே வந்தது. (அத்திகாபுல் குப்ரா லிஇப்னு சஅத் தொகுதி 1 பக்கம் 183. திக்ரி ஹிஜ்ரி ரஸூலுல்லாஹி (ஸல்). பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1990 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. ஸிரா சஹாபா தொகுதி 3 பக்கம் 180. அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி). கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் 2004 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.) அவருடைய வீட்டில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தங்கினார்கள். அன்னார் தங்கியிருக்கும்போது நடந்த ஒரு சம்பவம் அவரது வீட்டில் மாடிகள் இருந்தன. மேல் மாடியில் அபூ அய்யூப் அன்ஸாரி தங்கிக் கொண்டார். கீழ்ப் பகுதியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தந்து விட்டார். ஓரிரவு அவர் மேல் வீட்டில் இருக்கும் போது தண்ணீர் பானை உடைந்து விட்டது. அதாவது சுட்ட மண்ணால் செய்யப்பட்ட பானைகளில் தண்ணீர் வைத்திருப்பார்கள். மூன்றாம் உலக நாடுகளில் ஏழை நாடுகளில் பாகிஸ்தானில், ஆப்பிரிக்காவில் அத்தகைய மண்பானைகளில் தண்ணீர் வைக்கப்படுகிறது. அந்த பானை உடைந்து விட்டது. அபூ அய்யூப் அன்ஸாரி மற்றும் அவரது மனைவி இருவரும் இரவு முழுக்க அதனை உலர்த்திக் கொண்டிருந்தனர். மறுநாள் அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இரவு நடந்த சம்பவத்தைக் கூறி ஹுஸூர் நீங்கள் மேல் மாடியில் தங்குங்கள் என்றார். அன்னார் அவர்களின் கோரிக்கையை ஏற்றவாறு **6**, **7** மாதங்கள் அவர்களது வீட்டில் தங்கியிருந்தார்கள். விருந்தோம்பலின் உரிமையையும் அவர் மிக நன்றாக செய்ய முயன்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்டு விட்டு மிச்சம் வைப்பதைத்தான் உண்பவர்களாக இருந்தார்கள்.

ரிவாயத்தில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய விரல் பட்ட அடையாளத்தில் இருந்து அந்த மிஞ்சிய உணவை உண்டு வந்தார்கள். ஒருநாள் பார்த்தார்கள். உணவில் அன்னாரின் விரல்பட்ட அடையாளம் இல்லை. உணவு உண்ட மாதிரியே தெரியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சந்நிதியில் வந்து ஹுஸூர் நீங்கள் இன்று உண்ணவில்லையா? என்று கேட்டார். அன்னார் கூறினார்கள்: நான் உண்பதற்கு அமர்ந்தபோது அதில் வெங்காயமும், பூண்டும் தென்பட்டன. அது எனக்குப் பிடிக்காது. எனவே உண்ணவில்லை. ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி கூறினார். ஹுஸூருக்கு பிடிக்காதது எனக்கும் பிடிக்காது. வருங்காலத்தில் இந்த இரண்டையும் நானும்

உண்ண மாட்டேன் என்றார். இது அவர்களின் வியத்தகு அன்பு ஆகும். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 781 ஹதீஸ் 23966. முஸ்னது அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி). பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் அச்சிடப்பட்டது.)

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி எல்லா யுத்தங்களிலும் கலந்து கொண்டார்கள். (அத்திகாபுல் குப்ரா லிஇப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 369. பாபு அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி). பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1990 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.) கைபர் யுத்தத்தில் யூத தலைவர் கொல்லப்பட்டார். அவரது மகள் சஃபியா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய திருமண பந்தத்தில் வந்தார்கள். ருக்ஸதானாவிற்கு பிறகு மறுநாள் சுபுஹ் தொழுகைக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வந்தபோது அபூ அய்யூப் அன்ஸாரி அவர்கள் காவலுக்கு நிற்பதைப் பார்த்தார்கள். என்ன காரணத்தால் நீங்கள் காவலுக்கு நிற்கின்றீர்கள் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் சஃபியா உடைய உறவினர்களுக்கு நம்மவர்களால் சேதம் ஏற்பட்டுள்ளது. சிலர் காயமடைந்துள்ளார் எனவே எவரும் பதிலடி கொடுப்பதற்காக வந்து அதனால் உங்களுக்கு ஏதும் ஆபத்து நிகழ்ந்து விடக்கூடாது என்று காவலுக்கு வந்தேன் என்றார். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வே! அபூ அய்யூபை எப்போதும், அவர் எவ்வாறு இரவு முழுவதும் என்னை பாதுகாப்பதற்காக நின்றாரோ அதைப் போன்றே நீ அவரை உனது பாதுகாப்பில் வைப்பாயாக என்று அவருக்காக துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் அய்யூப் ரோம் யுத்தத்திலும் கலந்து கொண்டார். அப்போது அவர் மிகவும் வயது முதிர்ந்தவராகி விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கான்ஸ்டண்டினோபில் பற்றிய முன்னறிவிப்பு நிறைவேறுவதை பார்ப்பதற்காக கலந்து கொண்டார்கள். இந்நிலையில் அவர்கள் நோயுற்றார்கள். கடைசியில் அவர்களிடம் இறுதி விருப்பத்தைக் கேட்டபோது அன்னார் கூறினார்கள்: எல்லா முஸ்லிம்களுக்கும் எனது சலாத்தை தெரியுங்கள். எனது கபரை எதிரிகளின் பூமியில் எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ சென்று அங்கு அமைக்க வேண்டும். உடனே அவர் இறந்த பிறகு இரவு வேளையில் அவர்களது ஜனாஸா எதிரிகளின் பூமியில் எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ சென்று அங்கு அடக்கம் செய்யப்பட்டது. இப்போது அவர்களின் கபர் துருக்கியில் உள்ளது. பல ரிவாயத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில கதைகளாகவும் ஆகி விட்டன. உதாரணமாக, அவர்களின் கபரில் கேட்கப்படும் துஆக்கள் அப்படியே நிறைவேறி விடுகின்ற என்றெல்லாம் கூறப்படுகிறது. (அஸ்ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 65. கஸ்வா கைபர் பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2002 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.) எப்படி இருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவரது பாதுகாப்பு குறித்து துஆ செய்தார்கள். இதன் விளைவாக இவர்கள் நிறைய போர்களில் கலந்து கொண்டும் கூட பல இடங்களில் இவர்கள் வெற்றியுடன் திரும்பி வந்தார்கள். நீண்ட வயதை பெற்றார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒரு சஹாபி அப்துல்லாஹ் பின் ரவாஹா ஆவார்கள். இவர் அரபு நாட்டின் புகழ்பெற்ற கவிஞரும் ஆவார். இவர் ரஸூலின் கவிஞர் என்ற பட்டப் பெயராலும் அழைக்கப்பட்டார். (ஸீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 409. தாருல் இஷாஅத் கராச்சியில் 2002 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.) பத்ர் போர் முடிந்தவுடன் வெற்றி செய்தியை மதீனாவுக்கு கொண்டு வந்து சேர்த்தவர் இவர்தான். (அத்திகாபுல் குப்ரா லிஇப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 396. பாபு அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1990 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இருந்த பற்று, நேசம், தன்மானம் பற்றிய சம்பவங்கள் உள்ளன. அந்த இடங்களில் இவ்வாறு உள்ளது. உர்வாவின் ஒரு ரிவாயத் வருகின்றது. ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் கூறினார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் கழுதையில் சென்றார்கள்; அதில் சேணம் இருந்தது அதன் கீழ் பதக் ஊரின் ஒரு போர்வை இருந்தது. அதில் தமக்கு பின்னால் உஸாமாவை அமர்த்தி இருந்தார்கள். அன்னார் ஸஅத் பின் இபாதாவை உடல் நலம் விசாரிப்பதற்காக கஸ்ரஜ் கோத்திரத்திடம் அழைத்துச் சென்றார்கள். இது பத்ர் யுத்தத்திற்கு முன் நடந்த சம்பவம் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சபையைக் கடந்து சென்றபோது, அந்த சபையில் முஸ்லிம்கள், யஹூதிகள், இணை வைப்பவர்கள் எல்லாரும் கலந்து அமர்ந்திருந்தபோது அதில் அப்துல்லாஹ் பின் உபை இருந்தார். அப்துல்லாஹ் பின் ரவாஹாவும் இருந்தார்கள். அந்த சபையை நெருங்கியதும் கால்நடையின் காரணமாக தூசி எழும்பியது. அப்துல்லாஹ் பின் உபை தனது மூக்கை ஒரு போர்வையால் பொத்தியவாறு கூறினார்: எங்கள் மீது தூசியை போடாதீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவருக்கு அஸ்ஸலாமு அலைக்கும் கூறினார்கள். சவாரியிலிருந்து இறங்கினார்கள். அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார்கள். அவர்களுக்கு முன் குர்ஆன் ஓதினார்கள். அப்துல்லாஹ் பின் உபை கூறினார். மனிதரே! இது நல்லதல்ல. நீர் கூறுவது உண்மை எனில் பிறகும் கூட எமது சபையில் எமக்கு தொந்தரவு தராதீர்கள். உமது தங்குமிடத்துக்கு செல்லுங்கள். எவர்கள் உம்மிடம் வருவாரோ அவர்களிடம் செல்லுங்கள் என்றார். அந்த இடத்தில் அப்துல்லாஹ் பின் ரவாஹா இருந்தார்கள். அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் எமது சபைக்கு வாருங்கள். நாங்கள் இதனை விரும்புகிறோம். (சஹீஹ் முஸ்லிம். கிதாபுல் ஜிஹாது வஸ்ஸய்ர் பாபு ஃபித்துஆயின்னபி (ஸல்) வ ஸிபரிஹி ஹதீஸ் 4659) தமது தலைவர் என்ன கூறுகிறார் என்பதை அன்னார் பொருட்படுத்த –வில்லை. இது அன்னாரின் அன்பின் வெளிப்பாடு ஆகும். அப்துல்லாஹ் பின் ரவாஹா இவ்வாறு நடந்து கொண்டார். உலகத் தலைவர்களை அவர்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு படைக் குழுவை அனுப்பினார்கள். அதில் அப்துல்லாஹ் பின் ரவாஹாவும் இருந்தார்கள். அது ஒரு ஜுமுஆ நாளாக இருந்தது. அக்குழு சுபுஹ் நேரத்தில் புறப்பட்டு விட்டது. இவர் மட்டும் பின்தங்கி ஜுமுஆ தொழுது விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களடன் தொழுது விட்டு சென்று படையுடன் சேர்ந்து விடுவேன் என்றார். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவரை பள்ளியில் பார்த்தார்கள். ஜுமுஆ தொழுகைக்கு பிறகு அவரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), உமது உடன் உள்ளவர்களுடன் சேர்ந்து போகாமல் உம்மை தடுத்தது எது? என்று கேட்டார்கள். அவர் கூறினார்: யா ரஸூலல்லாஹ்! எனது அளவற்ற விருப்பம் ஜுமுஆ தொழுகையை தங்களுடன் தொழுது விட்டு, ஹுஸூருடைய குத்பாவை கேட்டு விட்டு பிறகு சென்று குழுவுடன் சேர்ந்து கொள்ள வேண்டும் என்பதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பூமியிலுள்ள எல்லாவற்றையும் நீர் செலவழித்தாலும் சரி. கட்டளையிட்டபடி சுபுஹ் நேரத்தில் இங்கிருந்து புறப்பட்டு அவ்விடத்தில் முந்திக் கொண்டவர்களின் கூலியை நீர் ஒருபோதும் பெற முடியாது; கட்டுப்படுவதே முதன்மையான கடமையாகும் என்று கூறினார்கள். (சுனன் திர்மிதி. அப்வாபுல் ஜுமுஆ. பாபு மா ஜாஅ ஃபீ ஸஃபரி யவ்முல் ஜுமுஆதி ஹதீஸ் 527)

ரிவாயத்தில் வருகிறது. பிறகு ஏதாவது யுத்தத்திற்கு அல்லது படைக்கு செல்வதாயின் அப்துல்லாஹ் பின் ராவாஹா அக்குழுவில் முதலில் செல்வார்கள். எல்லாரையும் விட கடைசியில் மதீனா திரும்புவார்கள். (அஸதுல் கஅபா தொகுதி 3 பக்கம் 237. அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைரூத்தில் உள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது) ஒரு ரிவாயத் வருகிறது. அப்துல்லாஹ் பின் ஸுபைர் அறிவிப்பு. மூத்தா போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஸைத் பின் ஹாரிஸாவை யுத்த தளபதியாக்கினார்கள். கூறினார்கள்: இவர் ஷஹீது ஆகி விட்டால் பிறகு ஜாஃபர் பின் அபூதாலிப் தளபதியாக இருக்க வேண்டும். அவரும் ஷஹீதாகி விட்டால் அப்துல்லாஹ் பின் ரவாஹா தலைமை ஏற்பார் என்றார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின்

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

ரவாஹாவும் ஷஹீதாகி விட்டால் முஸ்லிம்கள் யாரை விரும்புகிறீர்களோ அவரை தலைவராக்கிக் கொண்டு சண்டையிடுக. அந்த கூட்டம் புறப்படும்போது அப்துல்லாஹ் பின் ரவாஹா அழுதார்கள். மக்கள், அப்துல்லாஹ் ஏன் அழுகிறீர்? என்று கேட்டனர். அவர் கூறினார்: இறைவன் மீது ஆணையாக! எனக்கு உலகின் மீது ஒருபோதும் நேசம் இல்லை. ஆர்வமும் இல்லை. ஆனால் وَإِنْ مِّنْكُمْ إِلَّا وَارِدُهَا كَانَ عَلَى رَبِّكَ حَتْمًا مَّقْضِيًّا என்ற வசனம் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறக் கேட்டுள்ளேன். ஒவ்வொரு–வருக்கும் ஒருமுறை நெருப்பை சந்திக்க வேண்டியது வரும். எனவே எனக்கு தெரியாது. நான் ஸிராத் பாலத்தை கடக்கும் போது எனது நிலை எவ்வாறிருக்குமோ? என்று கூறினார்கள். (அஸதுல் கஅபா தொகுதி 3 பக்கம் 237. அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது) ஆனால் அல்லாஹ்வின் பயம் உள்ளவர்கள் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த முடிவு கிடைக்கும் என்ற செய்தியைக் கூறியுள்ளார்கள். அதுவும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூத்தா போரில் படைத் தலைவர்கள் சுவனத்தில் தங்கத்திலான அரியாசணங்களில் அமர்ந்திருப்பதை நான் பார்த்துள்ளேன். (அஸதுல் கஅபா தொகுதி 3 பக்கம் 238. அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

எனவே இம்மக்கள் தமது நோக்கத்தை அடைந்தவர்கள். அவர்களின் ஷஹாதத்தின் உணர்வை ஒரு கவிதையிலிருந்து தெரிய வருகிறது. அதன் பொருள்: என் மீது பாய்ந்துள்ள ஈட்டிகளே! அம்புகளே! எனது உடலில் இறங்கி இதயத்தை பிளந்து வெளியேறியவைகளே! இறைவனிடம் எமது ஷஹாதத் ஒப்புக் கொள்ளப்படட்டும்! எமது கபருகளைக் கடந்து செல்பவர்கள் அல்லாஹ் இவருக்கு நன்மைகளை வழங்குவானாக. இவர் எப்படிப்பட்ட ஷஹீது என்று துஆ செய்ய வேண்டும்.

இவர் மூத்தா போரில் ஷஹீது ஆன சம்பவம் இவ்வாறாகும். மூத்தா உடைய இடத்தை அடைந்த போது தெரிய வந்தது. பகைவர்கள் முஸ்லிம்–களுக்கு எதிராக ஹெர்கல் மன்னரின் உதவியை நாடியுள்ளார்கள். அவரும் முஸ்லிம்களுக்கு எதிராக இரண்டு இலட்சம் பேரைக் கொண்ட படையை அனுப்பி இருந்தார். இந்நிலையில் முஸ்லிம்கள் ஆலோசனை செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எதிரிகளின் எண்ணிக்கை அதிகம் என்று தகவல் அனுப்ப வேண்டும். எனவே தூது அனுப்புங்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்து என்ன கட்டளை வருகின்றதோ அதனை செயல்படுத்துவோம் என்று கூறினார்கள். இந்நிலையில் அப்துல்லாஹ் பின் ரவாஹா முஸ்லிம்களுக்கு மிகவும் தைரியமூட்டினார்கள். அவரது கவிதைகள் மிகவும் பயன்பட்டன. முஸ்லிம்களின் மூவாயிரம் பேர் கொண்ட படை எதிரிப் படையிலிருந்த இரண்டும் இலட்சம் பேருக்கு எதிரில் அவர்களை சந்திக்க முன் சென்றது. (அஸதுல் கஅபா தொகுதி 3 பக்கம் 237. அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா உடைய ஷஹாதத் சம்பவத்தை ஸைத் பின் அர்க்கம் இவ்வாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா என்னை தனது பெண் ஒட்டகத்தில் அமர்த்திக் கொண்டு மூத்தா போருக்கு அழைத்துச் சென்றார்கள். அப்துல்லாஹ் பின் ரவாஹாதான் ஸைத் பின் அர்க்கமை அனாதை குழந்தையாக எடுத்து வளர்த்தார்கள். மேலும் அவர்களுக்கு தர்பிய்யத் வழங்கினார்கள். நான் ஒருநாள் அப்துல்லாஹ் பின் ரவாஹாவை ஒரு கவிதை கூறக் கேட்டேன். அதில் தமது வீட்டில் உள்ளவர்களை விளித்து கூறினார்கள். நான் ஒருபோதும் வீட்டுக்குத் திரும்பிச் செல்ல மாட்டேன். மிகவும் இன்பத்துடன் இந்த கவிதையை அவர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அதில் அப்துல்லாஹ் தனது மனைவியை பார்த்து கூறினார்கள். வியாழக்கிழமை மாலையில் எனது ஒட்டகத்தை ஜிஹாதுக்காக நீர் தயார் செய்து கொண்டிருந்தபோது என்னை நெருங்கிய இறுதி நேரத்தில் உனது நிலை எத்தனை வாழ்த்துக்கு உரியதாகவும் நன்றாகவும் இருந்தது. உன்னிடம் எந்த குறையும் இல்லை. நான் யுத்தக் களத்திற்கு வந்து விட்டேன். நான் ஒருபோதும் திரும்பி உன்னிடம் வர மாட்டேன். இது தனது மனைவிக்கு மறைவாக கூறிய பிரியா விடையாக இருந்தது. மற்றவர் இதனைக் கேட்டு அழுது விட்டனர். அப்துல்லாஹ் அவரை கண்டித்தவாறு கூறினார். எனக்கு அல்லாஹ் ஷஹாதத் தந்தால் உனக்கு என்ன நஷ்டம் வந்து விடப்போகிறது? நீ எனது வாகனத்தில் ஏறி சுகமாக வீடு திரும்பலாம். (அஸதுல் கஅபா தொகுதி 3 பக்கம் 237-238. அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது) யுத்தக் களத்தில் அப்துல்லாஹ் பின் ரவாஹா பெரும் தைரிய காட்டினார்.


ஹஸ்ரத் ஹம்மான் பின் பஷீர் கூறினார்: ஹஸ்ரத் ஜாஃபர் ஷஹீதானார். அப்போது அப்துல்லாஹ் பின் ரவாஹா படையில் ஒரு விளிம்பில் இருந்தார்கள். மக்கள் அவர்களை கூப்பிட்டார்கள். அப்போது அவர் தன்னையே விளித்து கூறினார். ஒரு கவிதையை கூறியவாறு சென்றார்கள். அதன் பொருள், “எனது மனமே! உயிரை விடும் அளவில் நீ சண்டையிட மாட்டாயா? மரணக் குளத்தில் வீழ்ந்து நீ ஷஹீதாக விரும்பினாய். இப்போது அதற்கான நேரம் வந்து விட்டது. உயிரின் காணிக்கையை வழங்குவாயாக. அதனால் நீ நல்ல முடிவைப் பெறலாம்.”

முஸ்அப் பின் ஷீபா கூறினார்கள்: ஹஸ்ரத் ஸைத்தும், ஹஸ்ரத் ஜாஃபரும் ஷஹீதானதும் அப்துல்லாஹ் பின் ரவாஹா முன் வந்தார்கள். ஓர் ஈட்டி பட்டபோது இரத்தம் கொப்பளித்தது. அவர் தமது கைகளை நீட்டினார். இரத்தத்தை தனது முகத்தில் பூசினார். முஸ்லிம்கள் மற்றும் எதிரிகள் அணிகளுக்கும் நடுவில் அவர் இருந்தார். ஆனால் இறுதி மூச்சு இருக்கும் வரை முஸ்லிம்களுக்கு தைரியமூட்டிக் கொண்டிருந்தார். மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக முஸ்லிம்களை தமது உதவிக்காக அழைத்தார்கள். பாருங்கள் முஸ்லிம்களே! உங்களது சகோதரது உடல் எதிரிகளின் முன் கிடக்கிறது. முன் வாருங்கள். எதிரிகளை உங்கள் சகோதரரின் உடலை விட்டு தூர அகற்றுங்கள். இவ்வாறு முஸ்லிம்களும் மிகவும் எழுச்சியுடன் எதிரிகளை எதிர்த்தனர். ஒவ்வொரு படையாக வந்து எதிர்த்தனர். முடிவில் அப்துல்லாஹ் பின் ரவாஹா ஷஹீது ஆனார்கள். (அஸதுல் கஅபா தொகுதி 3 பக்கம் 237-238. அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

அன்னாரது ஒரு சிறப்புத்தன்மையை அவர்களது மனைவி கூறினார்கள்: இவரது ஷஹாதத்திற்குப் பிறகு இவரது மனைவிக்கு வேறு ஒருவருடன் திருமணம் நடந்தது. அவரது அந்த கணவர் கேட்டார். அப்துல்லாஹ் பின் ரவாஹா உடைய தூய வாழ்வு குறித்து எனக்கு சிறிது கூறுங்கள். அப்பெண் என்ன சாட்சி கூறினார்கள் எனில் அவர் கூறினார்: அப்துல்லாஹ் பின் ரவாஹா வீட்டிலிருந்து புறப்படும் முன் இரு ரக்அத் தொழாமல் வெளியேறியதும் இல்லை. அதே போன்று வீட்டிற்குள் நுழையும்போது அவரது முதல் வேலை உளூ செய்து விட்டு இரு ரக்அத் தொழுவதாக இருக்கும். (அல் இஷாபது ஃபீ தமீஸுஸ் ஸஹாபா தொகுதி 4 பக்கம் 74. அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2005 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

இவர்கள் தான் அல்லாஹ்வை எப்போதும் நினைவில் வைத்திருந்தவர்கள். இவர்களின் கட்டுப்படுதலின் தரத்தை ஒரு ரிவாயத் இவ்வாறு விவரிக்கிறது. ஹஸ்ரத் அபூ லைலா அறிவிக்கிறார்: ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது கூறினார்கள். மக்களே அமருங்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா குத்பா கேட்பதற்காக வெளியே வந்து கொண்டிருந்–தார்கள். அங்கேயே அமர்ந்தார்கள். அவரை விளித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அப்துல்லாஹ் பின் ரவாஹா அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் ஆகியோருக்கு கட்டுப்படுதலில் உமக்குள்ள அந்த உணர்வை அல்லாஹ் இன்னும் அதிகமாக்குவானாக.

மார்க்க சபைகளை உருவாக்குதல், அறிவார்ந்த பேச்சுக்களை பேசுதல், பிறரது

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

உரிமைகளை வழங்குதல் குறித்து இவர்களின் நிலை எவ்வாறு இருந்தது? ஹஸ்ரத் அபூ தர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவை நினைத்துப் பார்க்காத ஒரு நாள் வருவதிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன். தினமும் நான் அவரை நினைத்துப் பார்க்கிறேன். அதற்கு அவரது ஒரு சிறப்பு தான் காரணம். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவை நான் எப்போது பார்த்தாலும் அவர் பின்னால் இருந்தால் தனது கைகளை எனது தோளின் மீது வைப்பார். முன்னால் இருந்து வந்தால் எனது நெஞ்சில் கையை வைப்பார். பிறகு கூறுவார்: அபூ தர்தாவே! வாரும். அமருவோம். ஈமானை உறுதிப்படுத்து –வதற்காக, ஈமான் சம்பந்தமாக பேசுவோம். எப்போது சந்தர்ப்பம் கிடைத்தாலும் நாங்கள் அல்லாஹ்வை நினைவு கூறுவோம். எப்போதும் கூறுவார். அபூ தர்தாவே! இதுவே ஈமானின் சபையாகும் என்பார். (அஸதுல் கஅபா தொகுதி 3 பக்கம் 236. அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைரூத்தில் உள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

நமக்கு முன் வாழ்ந்தவர்கள் காட்டிய இந்த வாழ்வு நமக்கு முன்மாதிரியாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு இவர்களது சபைகளுக்கு தமது சான்றிதழை வழங்கினார்கள்?

ஹஸ்ரத் அனஸ் கூறினார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவுக்கு ஒரு பழக்கம் இருந்தது. எப்போது ஒரு சபையில் சந்தித்தாலும் தஆல நுஃமின் பிரப்பினா சாஅத்தன் – வாருங்கள். சிறிது உங்கள் ரப்பை ஈமான் கொள்ளுங்கள் என்று கூறுவார். இதே வார்த்தையை அன்னார் ஒருவரிடம் கூறியபோது அவருக்கு கோபம் வந்து விட்டது. நபி கரீம் (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார். அல்லாஹ்வின் தூதரே! இப்னு ரவாஹாவைப் பாருங்கள். இவர் மக்களை உங்கள் மீது ஈமான் கொள்வதிலிருந்து திருப்பி சிறிது நேரத்திற்காக ஈமானுக்கு அழைப்பு விடுக்கிறார். நபி கரீம் (ஸல்) கூறினார்கள்: யர்ஹமுல்லாஹு இப்னு ரவாஹா. அல்லாஹ் இப்னு ரவாஹாவின் மீது கருணை காட்டுவானாக! அவர் இதுபோன்று சபைகளை விரும்புகிறார். இதில் மலக்குமார்களும் கூட பெருமிதம் கொள்கின்றனர். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 676. முஸ்னது அனஸ் பின் மாலிக் (ரலி). பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா பெரும் கவிஞர் ஆக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சன்னிதானத்தில் இருந்த கவிஞர்களுள் கஅப் பின் மாலிக் ஹஸ்ஸான் பின் ஸாமித் இருவருக்கும் பிறகு இவர் மூன்றாவது பெரும் கவிஞராக இருந்தார்கள். அவர்களது கவிதைகள் உணர்ச்சியூட்டுவதாக இருந்தன.

முஃஜிமுஷ்ஷூ அராவின் ஆசிரியர் எழுதுகிறார்கள்: அப்துல்லாஹ் பின் ரவாஹா அறியாமைக் காலத்தில் கூட கவிதைகளின் கண்ணியத்திற்குரிய இடம் பெற்றவராக இருந்தார். இஸ்லாமிய காலத்திலும் இவருக்கு மிகச் சிறந்த இடம் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகத்துவம் குறித்து ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா ஒரு கவிதையைப் பாடினார். அது மிகச் சிறந்த கவிதையாக கூறப்படுகிறது. அக்கவிதை அன்னாரின் உள்ளத்தின் தகுதியை எடுத்துக் கூறுகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா அக்கவிதையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விளித்து கூறுகிறார்: ''முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடம் தமது உண்மையை வெளிப்படுத்துவதற்கு எல்லா ஒளிமிக்க அடையாளங்களும் இல்லா விட்டாலும் கூட அன்னாரின் முகம் மட்டும் அவர்களின் உண்மையை எடுத்துக் கூறுகிறது.'' (அல் இஷாபது ஃபீ தமீஸுஸ் ஸஹாபா தொகுதி 4 பக்கம் 75. அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி). பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபுல் இல்மிய்யாவில் 2005 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)


இவர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான பேரார்வம் கொண்டவர்கள். இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முகத்தைப் பார்த்து உண்மையைக் கண்டறிந்து கொண்டார்கள்.

பிறகு வரலாற்றில், இரு சிறு வயதை உடையவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவர்களின் துணிச்சல் வியக்கத்தக்கது. ஒருவர் முஆஸ் பின் ஹாரிஸ் பின் ரஃபாஅ, மற்றவர் முஅவ்வஸ் பின் ஹாரிஸ் பின் ரஃபாஅ. இருவரும் பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தனர். அபூஜஹிலை கொல்வதில் பங்கெடுத்தவர்கள். பத்ர் மைதானத்தில் கடும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. முஸ்லிம்களை விட அவர்களிடம் மூன்று மடங்கு அதிகமாக இருந்தன. அவர்களிடம் எல்லா வகை யுத்த தளவாடங்களும் இருந்தன. இஸ்லாத்தின் பெயரையும் அடையாளத்தையும் அழித்து விடுவதற்காக அவர்கள் வந்திருந்தனர். முஸ்லிம்கள் பாவம் மிகவும் குறைவாகவே இருந்தனர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் தமது சீரத்துல் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் முழு சம்பவத்தையும் எழுதுகிறார்கள். வறுமை மிக்க காலம். வெளிப்படையான பொருள்களைப் பொருத்தவரையில் மக்காவாசி –களின் முன் முஸ்லிம்கள் சில நிமிடங்களில் வேட்டையாளத் தக்கவர்களாக இருந்தனர். ஆனால் தவ்ஹீது மற்றும் ரஸூல் மீது கொண்ட பற்று அவர்களை எப்படி மாற்றியிருந்தது எனில், எந்த உணர்ச்சியில் மூழ்கி இருந்தனர் எனில், அப்போது உலகில் அவர்களை விட சக்தி வாய்ந்தவர் எவரும் இல்லை. அது அவர்களின் உயிருள்ள ஈமான் ஆகும். அதுவே அவர்களிடம் அசாதாரணமான ஆற்றலை அவர்களிடம் நிரப்பி இருந்தது. யுத்தக்களத்தில் அவர்கள் எத்தகைய முன்மாதிரியை நிலை நாட்டினார்கள் எனில் அதற்கு முன்னுதாரணம் கிடைக்கவில்லை. ஒவ்வொருவரும் மற்றவரை விட அல்லாஹ்வின் வழியில் உயிரைத் தருவதற்காகத் துடித்தனர்.

அன்னாரது உத்வேகத்தின் தரம் எப்படி இருந்தது எனில், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கிறார்கள்: யுத்தம் ஆரம்பித்ததும் நான் எனது இரு புறமும் பார்த்தேன். அன்ஸாரிகளின் இரு சிறுவர்கள் எனது வலமும் இடமும் நின்றனர். அவர்களைப் பார்த்து எனது உள்ளம் சோர்ந்தது. அந்த யுத்தங்களில் வெற்றி வலமும் இடமும் நிற்பவர்களைச் சார்ந்ததாக இருந்தது. எவருடைய இரு புறமும் அதாவது அவரது வலப்புறமும் இடப்புறமும் பாதுகாப்பாக இருக்குமோ அவரால்தான் சிறப்பாக சண்டையிட முடியும். அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் கூறுகிறார்: இரு சிறுவர்கள் என்னை எப்படி பாதுகாப்பார்கள். இந்நிலையில் ஒரு சிறுவன் கேட்டான். அவன் மற்ற பையனுக்கு, தான் கேட்பதை மறைக்க நினைத்தான். சிறிய தந்தையே! மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துக்கம் தந்த அபூஜஹில் எங்கே? என்று கேட்டான். அச்சிறுவன் கூறினான். நான் அபூஜஹிலைக் கொல்வதற்காக இறைவனிடம் வாக்குறுதி தந்துள்ளேன். நான் அவனை கொள்வேன் அல்லது அம்முயற்சியில் ஷஹீதாவேன் என்றான். நான் அந்த சிறுவனுக்கு பதில் சொல்லக் கூட இல்லை. மற்ற பக்கம் இருந்த இன்னொரு சிறுவன் இதே கேள்வியை கேட்டான். நான் அந்த சிறுவர்களைப் பார்த்து வியந்தேன். அபூஜஹில் ஒரு படையின் தலைவன். அவனைச் சுற்றி நாலாபுறமும் திடகாத்திரமான அனுபவமுள்ள படைவீரர்கள் நிற்கிறார்கள். நான் கையினால் அபூஜஹிலை அடையாளம் காட்டினேன். அப்துர் ரஹ்மான் கூறுகிறார்: நான் சைகையைக் காட்டியவுடன் இரு சிறுவர்களும் பறந்து சென்றார்கள். எதிரியின் வரிசையில் நுளைந்து கொண்டு உள்ளே சென்று அபூஜஹிலை தாக்கினர். இக்ரிமா பின் அபூஜஹில் கூட தந்தைக்கு பக்கத்தில் நின்றார். அவரும் தந்தையை காப்பாற்ற முடிவில்லை. பின்னால் தள்ள விரும்பினார். ஆனால் துண்டான கை, சண்டை செய்ய இடையூறாக இருந்தது. மஆஸ் அதனை இழுத்து தனது உடலை விட்டு தனியாக எடுத்து விட்டார். பிறகு சண்டையிட்டார். (சீரத் காத்தமுன் நபிய்யீன். ஆசிரியர்: ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) M.A பக்கம் 362) இந்த பையன்களிடம் ஈமானிய தன்மானம் இருந்தது. ஹஸ்ரத் நபிகள்


B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000




National
Watch Company
Sales & Service

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family restaurant

Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு,
குனியமுத்தூர், கோவை–5.

நாயகம் (ஸல்) அவர்கள் மீது பேரன்பு இருந்தது. அதுவே அவர்களை தைரியமூட்டியது. இம்மனிதர் இஸ்லாத்தை அழிக்க வந்துள்ளார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பல வருடங்களாக தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய முடிவு நம் கைகளால் ஏற்பட வேண்டும் என்று நினைத்தனர்.

இவர்கள் தற்கால பெயர் தாங்கி ஜிஹாதிகள் போன்றவர்களல்ல. இவர்கள் சிறுவர்களையும் இளைஞர்களையும் மூளைச் சலவை செய்கிறார்கள். இஸ்லாத்துக்காக வந்து சண்டை செய் என்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு நோக்கம் இருந்தது. எதிரிகள் நமக்கு பாதுகாப்பு தரமாட்டார்கள் எனில் பிறகு நம் எந்த தியாகத்தையும் செய்ய வேண்டும். அதன் மூலம் அமைதி நிலை பெற வேண்டும். குழப்பம் ஏற்படுவதற்காக அல்லது தற்காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இளைஞர்களும் பலவந்தமாகக் கடத்தி பிறகு மனமாற்றம் செய்யப்படுகிறது.

கடந்த நாட்களில் ஒரு செய்தி வந்தது. சிரியாவில் ஒரு 14 வயது சிறுவன். அவர்களிடம் இருந்து தப்பி வந்து விட்டான். அவன் ஸ்கூலில் இருந்து வரும் போது கடத்திச் சென்றார்கள். அவன் கூறுகிறான்: கடத்திச் சென்று எனக்கு டிரைனிங் தந்தார்கள். பிறகு அவனிடம் கடுமை காட்டப்பட்டு பிறகு அவனை சண்டையிட வைக்கிறார்கள். அவர்களிடமிருந்து நான் சிரமத்துடன் தப்பி வந்தேன் என்று அந்த சிறுவன் கூறினான். இவ்வகையான செயல்கள் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் பெயரால் செய்கின்றான். இது முழுக்க முழுக்க இஸ்லாமிய போதனைகளுக்கு எதிரானது. அவர்கள் யுத்தம் செய்தார்கள். இஸ்லாத்திற்காக உயிர் தருவதாக உணர்வு இருந்தது. காரணம் மார்க்கத்தை காப்பாற்ற வேண்டும். உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டும். தற்கால ஜிஹாதிகளுக்கும் அவர்களுக்கும் பெரும் வித்தியாசம் உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: சஹாபாக்களின் உதாரணத்தை எனது ஜமாஅத்தில் பார்க்க விரும்புகிறேன். அல்லாஹ்வுக்கு அவர்கள் முன்னுரிமை தரவேண்டும். எதுவும் அவ்வழியில் தடையாக இருக்கக் கூடாது. அவர்கள் தனது பொருளையும் உரிமையையும் ஒன்றுமற்றதாகக் கருத வேண்டும். நான் பார்க்கிறேன். சிலரிடம் இருந்து அஞ்சல் அட்டைகள் வருகின்றன. ஏதாவது வியாபாரம் அல்லது பணி மூலம் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அல்லது வேறு ஏதாவது சோதனை வந்தது எனில் உடனே சந்தேகம் வந்து விடுகிறது. நாங்கள் மஸீஹ் மவ்வூதை ஒப்புக் கொண்டதன் மூலம் தவறு ஏதும் செய்து விடவில்லையே? மார்க்கத்தை பற்றி இறைவனைப் பற்றி மஸீஹ் மவ்வூது பற்றி சந்தேகம் வந்து விடுகிறது. இந்நிலையில் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். தாம் தமது இலக்கில் இருந்து எந்த அளவுக்கு தூர விலகி இருக்கிறார்கள் என்று புரிய வேண்டும். இவர்களுக்கு சஹாபாக்களுக்கும் இடையில் எவ்வளவு வித்தியாசம் உள்ளது. சிந்தியுங்கள். சஹாபா இறைவனை திருப்திப்படுத்த விரும்பினர். இவ்வழியில் எவ்வளவு கடுமையை தாங்க வேண்டி வந்தாலும் சரி. ஏதாவது கஷ்டங்கள் துன்பங்கள் வரவில்லையெனில் அதற்கு தாமதமானால் அதற்காக அழுதார்கள். கதறினர். சரி, கஷ்டங்களுக்கு உள்ளாவது இறை திருப்தியை பெற்றுத் தரும் என்று சஹாபாக்கள் நினைத்தனர். அவர்கள் கூறுகிறார்கள்: அவர்கள் புரிந்து கொண்டனர். இந்த கஷ்டங்களுக்கு பின்னால் இறைவனது கருவூலம் மறைந்துள்ளது. தமது ஒரு ஃபார்ஸி கவிதையை இங்கு குறிப்பிடுகிறார்கள். எந்த ஒரு கஷ்டம் இந்த சமுதாயத்தின் மீது வந்தாலும் அதன் பின் இறைவனது கண்ணியத்தின் கருவூலம் மறைந்துள்ளது.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் அவர்களின் பாராட்டுதலால் நிறைந்துள்ளது. அதனை திறந்து பாருங்கள். சஹாபாக்களின் வாழ்வு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைக்கு ஒரு செயல் நிரூபணம் ஆகும். சஹாபாக்கள் அடைந்த தகுதியை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: மின்ஹூம் மன்கழா நஹ்பஹு வமின்ஹூம் மன் யன்தழிர் அவர்களுள் சிலர் ஷஹாதத்தைப் பெற்று விட்டனர். அதாவது அவர்களின் இலட்சியத்தை அடைந்து விட்டனர். சிலர் நாம் ஷஹீதாக வேண்டும் என்று அதை எதிர்பார்த்து இருக்கின்றனர். (33:24) சஹாபா உலகின் பக்கம் குனிந்திருக்கவில்லை. வயது நீண்டதாக இருக்க வேண்டும். இவ்வளவு செல்வம் வேண்டும் என்ற கவலை அவர்களுக்கு இல்லை. அவர்கள் கூறினார்கள்: சஹாபாக்களைப் பார்ப்பவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய்மையாக்கும் ஆற்றலையும் அருள்புரியும் முழுமைத் தன்மையை நிச்சயமாக ஒப்புக் கொள்ள வேண்டியது வரும்.

எவ்வாறு அன்னார் அவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டார்கள். அவர்களை முற்றிலும் இறை மனிதர் ஆக்கி விட்டார்கள். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைஹி. சுருக்கம் என்னவெனில், நமது ஃபர்ள் நமது அல்லாஹ்வின் திருப்தியைத் தேட வேண்டும். அதனை நமது அசல் நோக்கமாக ஆக்க வேண்டும். நமது எல்லா நோக்கமும் முயற்சியும் இறைவனை பெறுவதாக இருக்க வேண்டும். அதனை நமது அசல் நோக்கமாக ஆக்க வேண்டும். அது கடுமைகள் மற்றும் சோதனைகள் மூலமாக கிடைத்தாலும் சரிதான். இந்த இறை திருப்தி உலகம் மற்றும் உலகின் எல்லா திருப்தியை விடவும் உயர்ந்தது. (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 82-83; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) அல்லாஹ் நம்மை இதனை நிறைவேற்ற வாய்ப்பு தருவானாக.

தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுவிப்பேன். கண்ணியத்துக்குரிய அல்ஹாஜ் இஸ்மாயில் பிகே ஆடோ சாஹிப் உடையது. இவர்கள் கானாவைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கு 84 வயதில் வஃபாத் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர் பிறப்பு அஹ்மதி. இவரது தந்தை இஸ்மாயீல் வஹினா ஆடோ. தாயார் பெயர் ஜன்னத் ஆடோ ஆகும். இவரது தந்தை முதலில் கிறித்தவர். பிறகு 1928 பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். இஸ்மாயீல் ஆடோ சாஹிப் உடைய தாயார் சிறு வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். இவர் Secondary school வரை படித்தார். Ti School காமாஸியில் படித்தார். 1964 –ல் ஆங்கிலத்தில் பி.ஏ படித்தார்கள். பிறகு Teacher Training College கானாவில் தமது தொழில் கல்வியைக் கற்றார். பிறகு பல்வேறு இடங்களில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1980 வரை Assistant Headmaster ஆக இருந்தார். பிறகு மற்றொரு இடத்திற்கு மாற்றப்பட்டார்.

முஸ்லிம் மாணவர்களுக்கான வசதிகளை செய்து தருவார். அவர்கள் பணி செய்து வந்த பள்ளியில் முஸ்லிம் மாணவர்களுக்காக பள்ளியை உருவாக்குவார்கள். நிகோமா யுனிவர்சிட்டியில் Science and Technology –யில் ஆங்கிய ஆசிரியராக இருந்தார். பிறகு பல்வேறு கல்லூரிகளில் பாடம் நடத்தும் வாய்ப்பு பெற்றிருந்தார். பிறகு ஆங்கிலம் படித்துக் கொடுப்பது சம்பந்தமாக ஒரு நூலை எழுதினார். அது கானாவிலும் நைஜீரியாவிலும் மிகவும் பிரபல்யமானது; படிப்பிக்கபடுகிறது. அத்துறையில் இவருக்கு Scholarship கிடைத்தது. University of Bengal Wales இங்கு வந்து யூ.கே –வில் டிப்ளமோ வாங்கினார்.

பிறகு இவரது ஜமாஅத் பணிகளாவன: இவர் கானாவில் பல்வேறு ஜமாஅத் பொறுப்புகளில் இருந்துள்ளார்கள். 1980 –ல் கானா அரசாங்கம் இவரை எத்தியோப்பியாவின் தூதராக தெரிந்தெடுத்தது. மேலும் இதற்காக இவரை UNO உடைய Liberation Committee Chairman ஆகவும் ஆக்கியது. இதனால் இவர் மொசம்பிக் அங்கோலாவுக்கு விடுதலை பெற்றுத் தரவும் உழைத்தார். இவர் சில காலம் லிபியாவுக்கு தூதுவராக நியமிக்கப்பட்டார். இவர் எங்கு சென்றாலும் அங்கு உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவது இவரது சிறப்பம்சம் ஆகும். தமது அறிமுகத்தை அங்கு நிலை நிறுத்தி விடுவார். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் யூ.கே வந்த பிறகு இவர் தமது அரசியல் பணிகளுக்கு விடை கொடுத்து விட்டு இங்கு வந்து விட்டார். தமது குழந்தைகளுடன் கிலாஃபத்துக்கு அருகில் அமர்வதற்காக இங்கு வந்து விட்டார். இங்கு வந்ததும் கூட ஆங்கில ஆசிரியராக பணி செய்தார். கிலாஃபத்துடன் சிறப்பான நேசம் இருந்தது. எல்லா கிலாஃபத்துடனும் அன்பு நேசத்துடைய நடவடிக்கை கொண்டவராகவும் கட்டுப்படுதல் உடையவராகவும் இருந்தார். உஸ்மான் ருஸ்டிக்கு எதிராக ஒரு நூல் எழுதுவதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டபோது இவரை நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஒரு மெம்பர் ஆக்கினார்கள். தப்லீக் களத்திலும் இவர் மிகவும் நல்ல பணி செய்தார். பல்வேறு இடங்களில் தப்லீக் ஸ்டால் போட்டார். ரேடியோவில் தப்லீக் நிகழ்ச்சிகள் நடத்தினார். பல்வேறு ஜமாத்துகளில் கேள்வி பதில் சபைகளை நடத்தினார்.

1986 –ன் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் Fan African Ahmadiyya Association நிறுவிய போது இவர்களை அதன் முதல் தலைவராக நியமித்தார்கள். இவர்கள் ஏற்கனவே பேக்கம் ஜமாஅத்தின் முதல் சத்ராகவும் இருந்தார். 1994 –ல் MTA உருவாக்கப்பட்ட பிறகு உருது வகுப்பில் இவர் சிறப்பான மாணவர்களில் ஒருவராக இருந்தார். உருது படிக்க மிகவும் முயன்றார். எந்த அளவுக்கு அவர் அதற்காக முயன்றார் எனில் இவர் உருது வகுப்பில் படா பச்சா என்ற பெயரில் அறியப்பட்டார். கானியர்கள் அறிவர்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

# ஜுமுஆ பேருரை

இன்று மார்ச் 23 ஆம் தேதியாகும். இந்த நாள் ஜமாஅத்தில் மஸீஹ் மவ்வூது தினமாக நினைவு கூறப்படுகின்றது. இந்த நாளில் மஸீஹ் மவ்வூது தினக் கூட்டத்தை ஜமாஅத் நடத்துகின்றது. பல ஜமாஅத்துகளும் இந்த கூட்டத்தை நடத்தும். அதில் இந்த நாளுடன் தொடர்புடைய வரலாறு மற்றும் பின்னணி எடுத்துக் கூறப்படும்.

இந்த சமயத்தில் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். அவற்றில் அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் நோக்கம், அதன் தேவை மற்றும் அவரது அந்தஸ்து தொடர்பாகக் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வருகையின் நோக்கம், தேவை மற்றும் அன்னாரின் அந்தஸ்து தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹுஸூர் அவர்கள் ஜமாஅத் சகோதரர்களுக்கு அறிவுரைகளைக் கூறினார்கள்.

இன்றும் கூட அல்லாஹ்வின் அருளால் ஒரு குக்கிராமத்திலிருந்து எழுந்த ஓசை உலகிலுள்ள 210 நாடுகளில் பரவி விட்டது. இதுவே அவர்களின் உண்மைக்கான அடையாளமும் ஆகும். கடந்த 30 அல்லது 40 வருடங்களுக்கு முன்னர் அஹ்மதிய்யத் அந்த பகுதிகளில் சென்று சேரும் என்பதை கற்பனை செய்து கூட பார்த்திருக்க முடியாத உலகில் தொலை தூரப் பகுதிகளில் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி மட்டும் சென்று சேரவில்லை. மாறாக, அல்லாஹ் அங்கு எத்தகைய உறுதியான ஈமான் உள்ளவர்களை உருவாக்கியுள்ளான் என்றால் அதை பார்த்து வியப்பு ஏற்படுகின்றது.

பெனினிலுள்ள ஒரு கிராமத்தில் புதிய அஹ்மதி ஒருவர் வெளிப்படுத்திக் காட்டிய அவரது ஈமான், கலப்பற்ற தன்மை மற்றும் கொண்ட கொள்கையில் உறுதியாக நிலைத்திருப்பது தொடர்பான ஒரு சம்பவத்தை ஹுஸூர் கூறினார்கள். மேலும் அல்லாஹ்வின் உதவியும் ஆதரவும் அந்த அஹ்மதிக்கு எவ்வாறு கிடைத்தது என்பது பற்றியும் ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்றால் பிறகு அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கான உரிமையையும் பைஅத்திற்கான உரிமையையும் செலுத்துபவர்களாக நாம் இருக்கின்றோமா? என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். பெரும்பாலும் ஆய்வு செய்து பார்க்கும்போது இந்த விஷயம் நமக்கு முன்னால் வருவதை நான் பார்த்துள்ளேன். அதாவது நம்மில் பலரும் தொழுகைகளைக் கூட முழுமையாக நிறைவேற்றுபவர்களாக இருப்பதில்லை. தொழுகைகளின் பக்கம் கவனமே இருப்பதில்லை. சிலருக்கு இஸ்திக்ஃபார் செய்வதன் பக்கம் முற்றிலுமாக கவனமில்லாமல் இருக்கின்றது. பரஸ்பரம் நமக்கிடையில் ஒருவர் மற்றவரது உரிமையைச் செலுத்துவதன் பக்கம் கவனம் இருப்பதில்லை. இவை நமது நிலைமைகளாக இருந்தால் நாம் பொருத்தமான நற்செயல்களைச் செய்பவர்களாக இருக்கின்றோம் என்று நம்மைப் பற்றி எவ்வாறு கூற முடியும்?

மிகவும் கவலையுடன் நம்மில் ஒவ்வொருவரும் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே, சடங்கு என்ற ரீதியில் மஸீஹ் மவ்வூது தினத்தை கொண்டாடுபவர்களாக நாம் இல்லாமல் அன்னாரை ஏற்றுக் கொண்டதற்கான உரிமையைச் செலுத்துபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. எல்லா விதமான உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்களிலிருந்து தவிர்ந்திருப்பவர்களாக நாம் ஆவோமாக. அல்லாஹ் எப்போதும் நம்மை அவனது அடைக்கலத்தின்கீழ் வைப்பானாக. மேலும் ஒவ்வொரு சோதனையிலிருந்தும் துன்பத்திலிருந்தும் அவன் நம்மை காப்பாற்றுவானாக.

23 மார்ச் 2018 முதல் ஆங்கில மொழியில் அல்ஹகம் வாரப் பத்திரிகை தொடங்கப்பட்டிருக்கிறது என்ற நற்செய்தியை ஹுஸூர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த பத்திரிகையை இணையதளத்தில் பார்க்க முடியும். கைபேசி மற்றும் Tablets -ற்காக இதன் App -ம் கிடைக்கும். ஆங்கிலம் தெரிந்தவர்கள் இப்பத்திரிகையிலிருந்து அதிகமாக பயன் பெற வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**23 மார்ச் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **23 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

இன்று மார்ச் 23 ஆம் தேதியாகும். இந்த நாள் ஜமாஅத்தில் மஸீஹ் மவ்வூது தினமாக நினைவு கூறப்படுகின்றது. இந்த நாளில் மஸீஹ் மவ்வூது தினக் கூட்டத்தை ஜமாஅத் நடத்துகின்றது. அடுத்த இரண்டு நாட்கள் வாரத்தின் இறுதி நாட்களாக இருக்கின்றன. சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பல ஜமாஅத்துகளும் இந்த கூட்டத்தை நடத்தும். அதில் இந்த நாளுடன் தொடர்புடைய வரலாறு மற்றும் பின்னணி எடுத்துக் கூறப்படும். இந்த சமயத்தில் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். அவற்றில் அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் நோக்கம், அதன் தேவை மற்றும் அவரது அந்தஸ்து தொடர்பாகக் கூறியுள்ளார்கள். அவர்களின் வாதத்திற்குப் பிறகு பெயர் தாங்கி முஸ்லிம் ஆலிம்கள் முஸ்லிம் பொதுமக்களை அவர்களுக்கு எதிராக தூண்டுவதற்காக மிகவும் வலுவாக முயற்சி செய்து வந்தனர். அதிகமாக இதற்காக முயற்சி செய்தனர். எந்த அளவு எதிர்க்க முடியுமோ அந்த அளவு எதிர்த்தனர். இப்போது வரை இதைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால், அல்லாஹ்வின் உதவியினால் அவர்களது ஜமாஅத் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. நல்லியல்புள்ள மக்கள் ஜமாஅத்தில் இணைந்து கொண்டிருக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனின் வாக்குறுதிக்கு ஏற்ப தமது வருகையின் நோக்கத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு, நானே வர வேண்டிய வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றேன் என்ற அறிவிப்பை செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: உண்மையான ஏகத்துவம் நபி கரீம் (ஸல்) அவர்களின் களங்கமற்ற நிலை, கண்ணியம் மற்றும் உண்மை மற்றும் அல்லாஹ்வின் வேதம் அல்லாஹ்விடம் இருந்துதான் வந்துள்ளது என்பதன் மீது அநீதியான முறையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. எனவே, சிலுவையை முறிப்பவரான அவரை இறங்கச் செய்வது அல்லாஹ்வின் தன்மான உணர்வின் எதிர்பார்பாக இருக்க கூடாதா என்ன? إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ நாமே இந்த வேதத்தை இறக்கினோம். நாமே இதனை பாதுகாப்போம் (15:10) என்ற தனது வாக்குறுதியை அல்லாஹ் மறந்து விட்டானா என்ன? உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். இறைவனின் வாக்குறுதி உண்மையானதாகும். அவன் தனது வாக்குறுதிக்கேற்ப உலகிற்கு எச்சரிக்கை செய்பவர் ஒருவரை அனுப்பினான். ஆனால் உலகமோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் கண்டிப்பாக அவரை ஏற்றுக் கொள்வான். மிகவும் வலுவான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹாக வந்துள்ளேன் என்று உண்மையாகவே நான் உங்களுக்கு கூறிக் கொள்கின்றேன். விரும்பினால் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது மறுத்து விடுங்கள். நீங்கள் மறுப்பதனால் எதுவும் நடந்து விடாது. இறைவன் எதை நாடியுள்ளானோ அது கண்டிப்பாக நிகழ்ந்தே தீரும். ஏனென்றால், இறைவன் ஆரம்பத்திலேயே பராஹீனே பராஹீனே அஹ்மதிய்யாவில் صَدَقَ اللّٰهُ وَرَسُوْلُهٗ وَكَانَ وَعْدًا مَّفْعُوْلًا அதாவது, தூதரின் கூற்று உண்மையாகி விட்டது. மேலும், இறைவனின் வாக்குறுதி நிறைவேறி விட்டது என்று கூறியிருந்தான். (மல்.ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 206; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நபித்துவ வழிமுறைக்கு ஏற்ப இந்த இயக்கத்தை சோதித்துப் பாருங்கள். பிறகு உண்மை யாருடன் இருக்கின்றது என்று பாருங்கள். கற்பனையான கொள்கைகள் மற்றும் ஆலோசனைகளால் எதுவும் ஏற்படாது. எண்ணங்களிலுள்ள விஷயங்களின் அடிப்படையில் நான் என்னை மெய்ப்பிக்கவில்லை. நான் எனது வாதத்தை நபித்துவ வழிமுறையின் அளவுகோலுக்கு ஏற்பவே எடுத்து வைக்கின்றேன். பிறகு இதே கொள்கையின் அடிப்படையில் இதன் உண்மையை சோதித்துப் பார்க்காமல் இருப்பதற்கான காரணம் என்ன?

அன்னார் கூறுகின்றார்கள்: எவர்கள் உள்ளத்தை திறந்து நான் கூறுவதைக் கேட்பார்களோ அவர்கள் அதிலிருந்து பயன் பெறுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். மேலும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் எவர்கள் உள்ளத்தில் கருமித்தனமும் வெறுப்பும் கொண்டிருக்கின்றனரோ அவர்களுக்கு நான் கூறும் விஷயங்கள் எந்த பயனையும் தராது. அவரது உதாரணம் சரியான பார்வை இல்லாதவர் போன்றதாகும். (அவருக்கு ஒன்று, இரண்டாகத் தெரியும்) அவருக்கு ஒன்று, இரண்டாகத் தெரிகின்றது. அவருக்கு அது இரண்டு அல்ல ஒன்றுதான் என்பதற்கு எந்த அளவு ஆதாரங்களை தந்தாலும் அவர் அவற்றை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

அவர்கள் ஓர் உதாரணத்தை கூறுகின்றார்கள்: சரியாக பார்வை இல்லாத ஒருவர் ஊழியராக ஒரு நபரிடம் வேலை செய்து வந்தார். அவருக்கு தொண்டு புரிந்து வந்தார். அவரது எஜமானார் அவரிடம் உள்ளேயிருந்து கண்ணாடியைக் கொண்டு வாருங்கள் என்று கூறினார். அவர் உள்ளே சென்றார். திரும்பி வந்து உள்ளே இரண்டு கண்ணாடிகள் இருக்கின்றன. எதை நான் கொண்டு வருவது? என்று கேட்டார். எஜமானார் அவரிடம் ஒரு கண்ணாடிதான் இருக்கின்றது. இரண்டு அல்ல என்று கூறினார். சரியான பார்வை இல்லாத அவர் பிறகு நான் பொய்யனா என்ன? என்று கேட்டார். அவரது எஜமான் அவரிடம், நல்லது; அவற்றில் ஒன்றை உடைத்து விடுங்கள் என்று கூறினார். அதை உடைத்தபோதுதான் உண்மையிலேயே தவறு தன்னுடையதுதான் என்பது அவருக்கு தெரிய வந்தது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால், எனக்கு எதிராக இருக்கின்ற இந்த பார்வையற்றவர்களுக்கு நான் என்ன பதிலைக் கூறுவேன்? அன்னார் கூறுகின்றார்கள்: இம்மக்கள் மீண்டும் மீண்டும் எதையாவது எடுத்துக் கூறுகின்றனர் என்றால் நபிமொழிகளின் தொகுப்பைத்தான் எடுத்து கூறுகின்றனர். அதற்கு சுயமே அவர்கள் யூகத்தின் தகுதியைத் தான் வழங்கியுள்ளனர். அதற்கு மேல் எந்த தகுதியையும் அவற்றிற்கு அவர்கள் வழங்குவதில்லை. ஒரு நேரம் வரும். அப்போது இவர்கள் கூறுகின்ற வீணான விஷயங்களைக் கேட்டு மக்கள் சிரிப்பார்கள். (இவர்கள் கூறுகின்ற தலைகீழான விஷயங்களைக் கேட்டு மக்கள் சிரிப்பார்கள்).

அவர்கள் கூறுகின்றார்கள்: நம்மிடமிருந்து நமது வாதத்திற்கான ஆதாரத்தைக் கேட்பது உண்மையை தேடுகின்ற ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற உரிமையாக இருக்கின்றது. மிகவும் சரியான விஷயத்தைக் கூறியுள்ளார்கள். ஆதாரத்தைக் கேட்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் இதற்கான உரிமை இருக்கின்றது.

இதற்காக நபிமார்கள் எடுத்து வைத்தவற்றையே நாமும் எடுத்து வைக்கின்றோம். அதாவது, திருக்குர்ஆனின் வசனங்களையும் நபிமொழிகளையும் அறிவுப்பூர்வமான சான்றுகளையும் எடுத்துக் கூறுகின்றோம். அதாவது ஒரு சீர்திருத்தவாதியின் தேவையை உணர்த்துகின்ற இக்காலத்தின் தேவைகளையும் எனது கைகளின் மூலமாக இறைவன் வெளிப்படுத்தியுள்ள அடையாளங்களையும் எடுத்துக் கூறுகின்றோம்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஒரு வரைபடத்தை தயார் செய்துள்ளேன். அதில் ஏறக்குறைய 150 அடையாளங்களை நான் தந்துள்ளேன். ஒரு வகையில் அதற்கு கோடிக்கணக்கான மனிதர்கள் சாட்சியாக இருக்கின்றனர். வீணான விஷயங்களை எடுத்துக் கூறுவது நற்பாக்கியத்திற்குரிய பணியல்ல.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதனால்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் நெறி நீதி தீர்ப்பவராக வருவார் என்று கூறியுள்ளார்கள். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வரும்போது அவர் நெறி நீதி தீர்ப்பவராக வருவார். அவரது தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் தீர்ப்பு வழங்குபவராக வருவார். அவரது தீர்ப்பை ஏற்று கொள்ளுங்கள். எந்த மக்களது உள்ளங்களில் தீங்கு இருக்கின்றதோ அவர்கள் ஏற்றுக் கொள்ள விரும்பாமல் இருப்பதால் வீணான வாதங்களையும் ஆட்சேபனைகளையும் அவர்கள் செய்து வருகின்றனர். ஆனால், அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இறைவன் தனது வாக்குறுதிக்கு ஏற்ப வலுவான தாக்குதல்கள் மூலமாக எனது உண்மையை வெளிப்படுத்துவான். நான் இட்டுக்கட்டி பொய்யைப் புனைந்து கூறுபவனாக இருந்தால் அவன் என்னை உடனடியாக அழித்திருப்பான் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ஆனால், எனது எல்லா பணிகளும் சுயமே அவனது பணிகளாக இருக்கின்றன. நான் அவனிடமிருந்து வந்துள்ளேன். என்னை பொய்ப்படுத்துவது அவனை பொய்ப்படுத்துவதாகும். எனவே, சுயமே அவனே எனது உண்மையை வெளிப்படுத்தி விடுவான்.
(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 34-35; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

வாக்களிக்கப்பட்ட மஸீஹை பொய்ப்படுத்துவது மற்றும் அவரை மறுப்பதன் விளைவானது அல்லாஹ்வையும் அவனது தூதரான ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையும் மறுப்பது வரை உங்களை கொண்டு சென்று விடும் என்பதை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: என்னை மறுப்பது என்னை மட்டும் மறுப்பதல்ல. மாறாக இது அல்லாஹ்வையும் அவனது தூதரான ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையும் மறுப்பதாகும். ஏனென்றால், எவர் என்னை பொய்ப்படுத்துகின்றாரோ அவர் என்னை பொய்ப்படுத்துவதற்கு முன்னதாக அல்லாஹ்வை பொய்யாக்கி விடுகின்றார். (அல்லாஹ் காப்பானாக) ஆனால், உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்கள் எல்லையைக் கடந்து சென்று விட்டதை அவர் பார்க்கின்றார். இறைவன் إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ என்ற வாக்குறுதியைத் தந்திருந்தும் கூட அவர்களின் சீர்திருத்தத்திற்கான எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை என்று கருதுகின்றார். ஆனால், வெளிப்படையான முறையில் அவர் இந்த விஷயத்தின் மீது ஈமான் கொண்டுள்ளார். அதாவது, அல்லாஹ் கிலாஃபத் தொடர்பாக வாக்குறுதி வழங்கியுள்ள வசனங்களில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவத்தின் தொடரைப் போன்று இந்த முஹம்மதிய நபித்துவத்தின் தொடரிலும் கலீஃபாக்களின் தொடரை அவன் நிலைபெறச் செய்வான் என்ற வாக்குறுதியை வழங்கியுள்ளான். ஆனால், அவன் தனது அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று அவர் கருதுகின்றார். (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக) மேலும், இப்போது இந்த உம்மத்திலும் எந்தவொரு கலீஃபாவும் இல்லை என்று அவர் கருத வேண்டியது வரும். இது மட்டுமல்லாமல் இந்த விஷயத்தையும் அவர் மறுக்க வேண்டியது வரும். அதாவது திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மூஸா (அலை) அவர்களுக்கு ஒப்பானவர் என்று கூறியுள்ளதும் கூட சரியல்ல என்று அவர் கூற வேண்டியது வரும். (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக) ஏனென்றால், இந்த நபித்துவ தொடரின் முழுமையான ஒப்புமைக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு பிறகு பதினான்காம் நூற்றாண்டில் அன்னாரது நபித்துவ தொடரில் ஒரு மஸீஹ் வந்தது போன்று இந்த உம்மத்திலும் பதினான்காம் நூற்றாண்டில் ஒரு மஸீஹ் வருவது அவசியமானதாக இருந்தது. இவ்வாறே அஹ்மதின் பிரதிபிம்பமாக ஒருவர் வருவது பற்றிய செய்தியை தருகின்ற آخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ (இன்னும் அவர்களைச் சாராத பின்னவர்களிலிருந்து அந்த தூதர் தோன்றுவார்) என்ற வசனத்தையும் அவர் மறுக்க வேண்டியது வரும். இவ்வாறு திருக்குர்ஆனில் பல வசனங்களை பொய்ப்படுத்துவது அவருக்கு கட்டாயமானதாக ஆகி விடும். இன்னும் சொல்வதென்றால், நான் வாதம் செய்து இதனை கூறுகின்றேன். அதாவது, அல்ஹம்து முதல் வன்னாஸ் வரையிலுள்ள முழு குர்ஆனையும் அவர் கை விட வேண்டியது வரும். பிறகு என்னை பொய்ப்படுத்துவது எளிதான ஒரு விஷயமா? என்பதைப் பற்றி சிந்தனை செய்யுங்கள். இதை சுயமே என் தரப்பிலிருந்து நான் கூறவில்லை. இறைவன் மீது ஆணையிட்டு நான் கூறுகின்றேன். இதுவே உண்மையாகும். அதாவது, எவர் என்னை விட்டு விடுவாரோ, மேலும் என்னை பொய்ப்படுத்துவாரோ அவர் நாவால் கூறாமலிருந்தாலும் தனது செயலால் முழு குர்ஆனையும் பொய்ப்படுத்தி விட்டார். இறைவனை கை விட்டு விட்டார். இதன் பக்கம் எனக்கு வந்த ஓர் இல்ஹாமிலும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. அல்லாஹ் அவர்களை நோக்கி أَنْتَ مِنِّي وَأَنَا مِنْكَ என்று கூறினான்.

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

அன்னார் கூறுகின்றார்கள்: என்னை பொய்ப்படுத்துவதன் மூலம் இறைவனை பொய்ப்படுத்துவது கட்டாயமானதாக ஆகி விடும் என்பதில் சந்தேகமில்லை. என்னை ஏற்றுக் கொள்வதன் மூலம் இறைவன் மெய்ப்பிக்கப்படு–கின்றான். மேலும் அவனது இருப்பின் மீது வலுவான ஈமான் உருவாகின்றது. பிறகு என்னை பொய்ப்படுத்துவது என்னை மட்டும் பொய்ப்–படுத்துவது அல்ல. இது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பொய்ப்படுத்துவதாகும். ஒருவர் என்னை பொய்ப்படுத்துவதற்கும் மறுப்பதற்கும் துணிவதற்கு முன்னதாக சிறிதளவு தனது உள்ளத்தில் சிந்தித்துப் பார்த்து அவர் எவரை பொய்ப்படுத்துகின்றார் என்பது பற்றி அவரது உள்ளத்திடம் ஃபத்வா கேட்கட்டும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹை பொய்ப்படுத்து–வதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பொய்ப்படுத்துவது கட்டாயமானதாக ஆகி விடுகின்றது என்பதை மேலும் விளக்கியவாறு இதற்கான காரணம் என்ன? எவ்வாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹை மறுப்பதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் பொய்ப்படுத்தப்படுகின்றார்கள் என்பது தொடர்பாக ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: வாக்களிக்கப்பட்ட மஸீஹை மறுப்பதனால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏன் பொய்ப்படுத்தப்படுகின்றார்கள்? பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் சீர்திருத்தவாதி தோன்றுவார் என்று வாக்குறுதி வழங்கி இருந்தார்கள். அது பொய்யாகி விட்டது. (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக) பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இமாமுக்கும் மின்கும் (உங்களது இமாம் உங்களிலிருந்து தோன்றுவார்) என்று கூறியதும் தவறாகி விட்டது. (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக) அன்னார் சிலுவை குழப்பம் நிலவும் சமயத்தில் ஒரு மஸீஹ் மற்றும் மஹ்தி வருவார் என்று கூறிய நற்செய்தியும் கூட தவறாக ஆகி விட்டது. (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் இதிலிருந்து காப்பானாக) ஏனென்றால், இந்த குழப்பம் இருக்கின்றது. ஆனால், வர வேண்டிய அந்த இமாம் வரவில்லை. இந்த விஷயத்தை ஒருவர் ஏற்றுக் கொள்ளும் போது செயலளவில் அவர் பெருமானார் (ஸல்) அவர்களை பொய்ப்படுத்துபவராக ஆகுவாரா? ஆக மாட்டாரா?

அன்னார் கூறுகின்றார்கள்: மீண்டும் நான் விளக்கமாக கூறுகின்றேன். என்னை பொய்ப்–படுத்துவது எளிதான காரியமல்ல. என்னை காஃபிர் என்று நீங்கள் கூறுவதற்கு முன்னதாக சுயமே நீங்கள் காஃபிராக ஆக வேண்டியது வரும். என்னை மார்க்கமற்றவன் என்றும் வழிதவறி விட்டவன் என்றும் கூறுவதற்கு முன்னதாக நீங்கள் வழிதவறிச் சென்று விட்டதையும் உங்களுக்கு ஏற்படுகின்ற இழிவையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். திருக்குர்ஆனையும் ஹதீஸையும் கை விட்டு விட்டவன் என்று என்னைப் பற்றி கூறுவதற்கு முன்னதாக முதலில் சுயமே திருக்குர்ஆனையும் ஹதீஸையும் நீங்கள் கை விட வேண்டியது வரும். இவ்வாறிருந்தும் கூட அவர்தான் அவற்றை கை விட்டு விடுவார். (அதாவது நான் அவற்றை கை விட்டு விட்டேன். அவற்றை நான் கை விட்டு விட்டேன் என்று கூறுபவர்தான் அவற்றை கை விட்டு விடுகின்றார்.)

அன்னார் கூறுகின்றார்கள்: நான் திருக்குர்ஆனையும் நபிமொழியையும் உண்மைப்–படுத்துபவனாக இருக்கின்றேன். நான் வழிதவறிச் சென்றவன் அல்லன். நான் மஹ்தியாக இருக்கின்றேன். நான் காஃபிர் அல்ல. மாறாக, أَنَا أَوَّلُ الْمُؤْمِنِيْنَ (நான் நம்பிக்கை கொண்டவர்களில் முதன்மையானவனாக இருக்கின்றேன்) என்பதற்கு சரியான முறையில் மெய்ப்பிக்கக் கூடியவனாக இருக்கின்றேன். எவற்றையெல்லாம் நான் கூறுகின்றேனோ அவை உண்மையாகும் என்பதை இறைவன் எனக்கு வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். எவருக்கு இறைவன் மீது உறுதி இருக்கின்றதோ, மேலும் எவர் திருக்குர்ஆன் உண்மையானது என்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உண்மையாளர் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றாரோ அவருக்கு எனது நாவிலிருந்து கூறப்படுவதைக் கேட்டு விட்டு அமைதியாக இருந்து விடுகின்ற அந்த அத்தாட்சியே போதுமானதாகும். ஆனால் எவர் துணிச்சலுடனும் தரக்குறைவாகவும் நடந்து கொள்கிறாரோ அவருக்கு என்ன சிகிச்சை செய்ய முடியும்? இறைவன் சுயமே அவருக்கு புரிய வைப்பான்.

அவர்கள் இந்த எல்லா விஷயங்களையும் அவர்களிடம் வந்திருந்த ஒரு விருந்தினருக்கு புரிய வைத்தார்கள். அவர்கள் கூறினார்கள்: எனது விவகாரத்தில் அவசரம் காட்டாதீர்கள். மாறாக, நல்லெண்ணத்துடனும் மூளையில் எந்த எண்ணமும் இல்லாமல் இதுபற்றி சிந்தனை செய்யுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 14-16; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு அன்னார் ஒரு சந்தர்ப்பதில் இவ்வாறு கூறுகின்றார்கள்: எனவே இந்த மக்களது உள்ளத்தில் கருமித்தனமும் பிடிவாதமும் இல்லாமல் இருந்தால் அவர்கள் நான் கூறுவதைக் கேட்க வேண்டும். மேலும் எனக்கு பின்னால் வர வேண்டும். பிறகு இறைவன் அவர்களை இருளில் விட்டு விடுகின்றானா என்ன? அல்லது ஒளியின் பக்கம் கொண்டு செல்கின்றானா என்ன? என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். எவர் பொறுமையுடனும் உண்மையான உள்ளத்துடனும் எனக்கு பின்னால் வருவாரோ அவர் அழிக்கப்பட மாட்டார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். மாறாக, அவர் என்றும் அழியாத அந்த வாழ்க்கையின் பங்கைப் பெறுவார். அதாவது இவ்வுலகிலும் அவர் அருட்கொடையைப் பெறுவார். மறுமை வாழ்க்கையிலும் அல்லாஹ் அவர்களுக்கு அருட்கொடைகளை வழங்குவான்.

அன்னார் கூறுகின்றார்கள்: எவரது உள்ளம் தூய்மையாக இருக்கின்றதோ, மேலும் இறையச்சமும் அவரிடம் இருந்தால் அவருக்கு முன்னால் ஒருவர் இரண்டாவது முறையாக திரும்பி வருவது பற்றி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வழங்கியுள்ள தீர்ப்பை எடுத்துக் கூறுகின்றேன். அவர் எனக்கு அது பற்றி புரிய வைக்கட்டும். மஸீஹ் வருவதற்கு முன்னதாக எலியா வர வேண்டியது அவசியமானதல்லவா? என்ற யூதர்களின் கேள்விக்கு எந்த பதிலை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறினார்களோ அது சரியா? இல்லையா? என்பதை அவர் எனக்கு புரிய வைக்கட்டும். யூதர்கள் தமது வேதத்தில் எழுதப்பட்டிருந்ததை அவர்களுக்கு முன்னால் வைத்தனர். அதாவது மலாக்கி தீர்க்கதரிசியின் நூலில் எலியா வருவது பற்றி எழுதப்பட்டிருக்–கின்றது. எலியாவிற்கு ஒப்பானவர் பற்றிய எந்த குறிப்பும் அதில் இல்லை. சுயமே எலியா வருவது பற்றி தான் அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எலியாவிற்கு ஒப்பானவர் பற்றி அதில் குறிப்பிடப்படவில்லை. அவரது முன்மாதிரியாக திகழ்கின்ற ஒருவர் வருவது பற்றி அதில் எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: வர வேண்டியவர் இதே யோவான்தான். நீங்கள் விரும்பினால் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று ஈஸா (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இப்போது நீதியுடன் தீர்ப்பு கூறுகின்ற ஒருவர் முன்னால் தீர்ப்பிற்காக இந்த விஷயத்தை வைத்து விட்டு அவர் யாருக்கு சாதகமாக தீர்ப்பு கூறுவார் என்பதை பாருங்கள். ஒரு நீதிபதி முன்னால் தீர்ப்பிற்காக இந்த விஷயத்தை வைத்து விட்டு அவர் யாருக்கு சாதகமாக தீர்ப்பு கூறுவார் என்பதைப் பாருங்கள். நிச்சயமாக அவர் யூதர்களுக்கு சாதகமாகத்தான் தீர்ப்பு கூறுவார். ஏனென்றால், வெளிப்படையாக என்ன எழுதப்பட்டிருக்கின்றதோ அதற்கு ஏற்பவே தீர்ப்பு கூறப்படும். (ஆனால், அந்த தீர்ப்பு சரியானதல்ல என்று அன்னார் கூறுகின்றார்கள்.) ஆனால் இறைவன் மீது நம்பிக்கை வைத்துள்ள மற்றும் இறைவனிடமிருந்து வருகின்ற தூதர்கள் எவ்வாறு வருகின்றனர் என்பதை அறிந்திருக்கின்ற நம்பிக்கை கொண்ட ஒருவர் மஸீஹ் எதை கூறினாரோ, எதனை செய்தாரோ அதுதான் சரியானது என்று உறுதியாக நம்புவார்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அதே போன்ற விவகாரம்தான் இந்த சமயத்திலும் இருக்கின்றதா? அல்லது இதற்கு வேறுபட்ட ஒன்றாக அது இருக்கின்றதா? என்று நீங்களே கூறுங்கள். இறைவன் மீதுள்ள அச்சம் இருந்தால் எனது இந்த வாதம் பொய்யானதாகும் என்று கூறுவதற்கு துணிகின்றபோது உடல் நடுங்கி விடும். அந்தோ பரிதாபம்! ஃபிர்அவ்னின் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு நபரிடம் இருந்த அந்த அளவு ஈமான் கூட இவர்களிடம் இல்லையா? அந்த நபர் இவர் பொய்யராக இருந்தால் சுயமே இவர் அழிந்து விடுவார் என்றே அவர் கூறினார். என் தொடர்பாக தக்வாவுடன் செயல்படுபவராக இவர்கள் இருந்தால் இதையே அவர்களும் கூறியிருக்க வேண்டும். இறைவன் தனது ஆதரவையும் உதவியையும் எனக்கு வழங்குகின்றானா? அல்லது எனது இயக்கத்தை அழிக்கின்றானா? என்பதை அவர்கள் பார்க்க

**Classic Mobile's & Watch,**
**Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE



276, N.H. Road, Coimbatore - 641 001.

வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 30-31; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இன்றும் கூட அல்லாஹ்வின் அருளால் ஒரு குக்கிராமத்திலிருந்து எழுந்த ஓசை உலகிலுள்ள 210 நாடுகளில் பரவி விட்டது. இதுவே அவர்களின் உண்மைக்கான அடையாளமும் ஆகும்.

கடந்த 30 அல்லது 40 வருடங்களுக்கு முன்னர் அஹ்மதிய்யத் அந்த பகுதிகளில் சென்று சேரும் என்பதை கற்பனை செய்து கூட பார்த்திருக்க முடியாத உலகில் தொலை தூரப் பகுதிகளில் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி மட்டும் சென்று சேரவில்லை. மாறாக, அல்லாஹ் அங்கு எத்தகைய உறுதியான ஈமான் உள்ளவர்களை உருவாக்கியுள்ளான் என்றால் அதை பார்த்து வியப்பு ஏற்படுகின்றது.

ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன்: பெனின் ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு சிறிய நாடாகும். 2012 –ல் அங்கு ஒரு ஜமாஅத் நிறுவப்பட்டது. அந்த கிராமத்தைச் சார்ந்த ஓர் அஹ்மதி இப்ராஹீம் சாஹிப் அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதற்கு முன்னரும் அங்கு முஸ்லிம்கள் இருந்தனர். போதுமான அளவு அறிவுள்ளவர்களாக அவர்கள் இருந்தனர். இப்ராஹீம் சாஹிப் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு கலப்பற்ற தன்மையிலும் பற்றுதியிலும் முன்னேற ஆரம்பித்தார். தமது உறவினர்களுக்கும் அவர் சகோதரருக்கும் தப்லீக் செய்ய ஆரம்பித்தார். இவர் தப்லீக் செய்து நமது மார்க்கத்திலிருந்து நம்மை விலக்குகின்றார் என்று இவரது தப்லீகினால் மிகவும் தொந்தரவுக்கு ஆளாகி விட்ட இவரது சகோதரர் இவருடன் சண்டையிட ஆரம்பித்தார். ஆனால், இவர்களோ தப்லீக் செய்து கொண்டே இருந்தார்கள். மக்களுக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை, உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அவர்கள் எட்ட வைத்துக் கொண்டே இருந்தார்கள். இவரது முயற்சியினால் அல்லாஹ்வின் அருளால் இவருக்கு அக்கம் பக்கத்திலுள்ள மூன்று கிராமத்தைச் சார்ந்தவர்களும் அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டனர். இவரது சகோதரர் தனது ஒரு நண்பருடன் சேர்ந்து இவரை கொலை செய்ய திட்டம் தீட்டினார். இதற்கு ஒரே சிகிச்சைதான் இருக்கின்றது. அதாவது இவரை கொலை செய்து விட வேண்டும் என்று அவர் தீர்மானித்தார்.

இப்ராஹீம் சாஹிப் கூறுகின்றார்கள்: நான் கனவில் எனது சகோதரரும் அவரது நண்பரும் ஒரு பெரிய குழியைத் தோண்டி அதில் எதையோ இடுவதைப் பார்த்தேன்.

இவர் கூறுகின்றார்: இவ்வாறு கனவு கண்டு மூன்று நாட்கள் கழிந்திருந்த நிலையில் இவரது மூத்த சகோதரரின் நண்பர் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். பிறகு அவர் மரணித்து விட்டார். இதைப் பார்த்த இவரது சகோதரர் அஹ்மதிகள் எனது நண்பர் மீது மந்திரம் செய்து விட்டனர் என்று கூற ஆரம்பித்தார்.

இவர்கள் கூறுகின்றார்கள்: சிறிது காலம் கழிந்ததும் நான் ஒரு கனவு கண்டேன். இவர்களது சகோதரர் ஒரு மரத்துடன் சேர்ந்து நின்றவாறு சுயமே தன்னை அளந்து பார்த்துக் கொண்டிருந்தார். அந்த பகுதியில் இந்த வழக்கம் இருந்து வந்தது. அதாவது அங்கு எவராவது மரணித்து விட்டால் அவரது கபருக்காக குழி தோண்டுவதற்காக மய்யித்தை மரத்துடன் சேர்த்து ஒட்டி வைத்து அதை அளந்து பார்ப்பார்கள். அதன் மூலம் அதன் அளவிற்கேற்ப கபர் அமைக்கப்படும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில நாட்கள் கழிந்த பிறகு மூத்த சகோதரரின் கருவுற்றிருந்த மனைவி நோய்ப்பட்டிருந்தார். இரண்டு நாட்களுக்குள் அவர் வஃபாத் ஆகி விட்டார். அவரது அப்பாவி குழந்தைகளும் நோய்வாய்ப் –பட்டன. நோய் குறையவில்லை. அவரது சகோதரர் இவர் மந்திரத்தில் ஈடுபடுகின்ற ஒரு நபர் ஆவார் என்று இப்ராஹீம் சாஹிப் தொடர்பாக எல்லா இடங்களிலும் கூற ஆரம்பித்தார். அங்குள்ள உள்ளூர் அரசர் அதாவது Chief இடம் சென்று புகார் கூறினார். அந்த Chief கொஞ்சம் ரூபாயை இவரிடமிருந்து கேட்டார். அதை கொண்டு வா. நான் இவருக்கான சிகிச்சையை செய்வேன் என்று கூறினார். அவரது சகோதரரும் அந்த Chief –ற்கு தொகையை செலுத்தினார். அரசர் இப்ராஹீம் சாஹிபை அழைத்தார். இவர்கள் அவனிடம் சென்றதும் நீங்கள் என்ன வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கின்றீர்கள்? என்று அந்த Chief மிகவும் ஆத்திரத்துடன் கேட்டார். புதிய மதத்தை தழுவியுள்ளீர்கள். புதிய மார்க்கத்தை ஆரம்பித்துள்ளீர்கள். இவற்றையெல்லாம் உடனடியாக விட்டு விடுங்கள் என்று கூறினார். மேலும் தவ்பா செய்யுங்கள். அவ்வாறு செய்யாமல் இருந்தால் நாளை சூரியனை உங்களால் பார்க்க முடியாது. நாளைய நாள் உம்மீது உதயமாகாது என்று Chief கூறினார். அதற்கு இப்ராஹீம் சாஹிப் அவர்கள் மார்க்கத்தை உண்மை என்று புரிந்தே நான் ஏற்றுக் கொண்டேன். இதை என்னால் விட்டு விட முடியாது. மரணிப்பதை பொருத்த வரையில் வாழ்வும், மரணமும் அல்லாஹ்வின் கைகளில்தான் இருக்கின்றது என்று கூறினார்கள். அதற்கு இந்தப் பகுதியின் இறைவன் நான் ஆவேன். நான் விரும்புவதை செய்கின்றேன். நான் என்ன தீர்ப்பை வழங்க இருக்கின்றேன் என்பதை நீங்கள் நன்கு தெரிந்திருக்கின்றீர்கள். எவரைப் பற்றி நாளைக்குள் அவர் இறந்து விடுவார் என்று நான் கூறுவேனோ அவர் கண்டிப்பாக இறந்து விடுவார் என்று Chief கூறினார். இப்ராஹீம் சாஹிப் அவர்கள் நல்லது, உங்களது வழக்கத்திற்கேற்ப மக்களுக்கு இவ்வாறு கூறிக் கொண்டிருப்பீர்கள். ஆனால், உங்களைப் பற்றி நான் எதுவும் கூறப்போவ –தில்லை. ஆனால் எனது மார்க்கத்தை நான் கை விட மாட்டேன். ஏனென்றால் இதுவே உண்மை ஆகும். இதுவே உண்மையான இஸ்லாம் ஆகும் என்று கூறினார்கள். இதைக் கேட்டு Chief –ற்கு மேலும் கோபம் வந்தது. தமது மக்களிடம் இவரை அறையில் அடைத்து வையுங்கள் என்று அவர் கூறினார். அவர்கள் அவரை கொண்டு சென்று கொண்டிருந்தபோது இப்ராஹீம் சாஹிப் அந்த மக்களைப் பார்த்து நீங்கள் எனக்கு மத்தியில் வர வேண்டாம். இந்த விவகாரத்தை விட்டு விடுங்கள். என்னை போக விடுங்கள் என்று கூறினார்கள். மக்களும் பேராசை உள்ளவர்களாக இருக்கின்றனர். அம்மக்கள் சிறிது தொகையை இவரிடமிருந்து எடுத்துக் கொண்டு இவரை விட்டு விட்டனர். அடுத்த நாளே இப்ராஹீம் சாஹிப் மீது அந்த அரசர் சூரியனை உதிக்க வைப்பது ஒருபுறம் இருக்கட்டும். அடுத்த நாளே அந்த அரசருக்கு பக்கவாதம் ஏற்பட்டு விட்டதாக தகவல் கிடைத்தது. அவருக்கு அசையக் கூட முடியவில்லை. இரண்டு நாட்கள் கழிந்ததும் அவர் மரணமடைந்தார். இதை பார்த்து இவர்களின் எதிரியாக இருந்த இவரது மூத்த சகோதரர் தமது குடும்பத்தினரிடம் எங்களுக்குள் சமாதானம் செய்து வையுங்கள். நான் எவரிடமும் சண்டையிட்டதில்லை என்று கூறினார். நாங்கள் எப்போதும் சமாதானத்தையே விரும்புகின்றோம். இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியும் இதுவேயாகும்.

Chief மரணமடைந்த இந்த அடையாளத்தைப் பார்த்து அந்த பகுதியில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. இது பற்றிய பெரிய சர்ச்சை நடைபெற்றது. உண்மை நிரூபணமானது. இவ்விஷயங்கள் அல்லாஹ்வின் அருளால் இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆதரவாக இருந்து வருகின்றன. ஆதாரமாகத் திகழ்கின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள். நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். என்னை மெய்ப்பிக்கின்ற வகையிலுள்ள ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. வெளிப் –பட்டுக் கொண்டிருக்கின்றன. வருங்காலத்திலும் அவை வெளிப்படும் (அவை நின்றுவிடவில்லை).

அன்னார் கூறுகின்றார்கள்: வருங்காலத் –திலும் அவை வெளிப்படும். இது மனிதனின் திட்டமாக இருந்திருந்தால் அதற்கு இந்த அளவு ஆதரவும் உதவியும் ஒருபோதும் கிடைத்திருக் –காது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 48) இது அல்லாஹ்வின் திட்டமாகும். அதன் காரணமாகவே அதற்கு உதவி கிடைக்கின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் சீர்த்திருத்தவாதி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தேவை குறித்து ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எவ்வாறு ஒவ்வொரு விளைச்சலையும் அறுவடை செய்வதற்கான நேரம் வருகின்றதோ அவ்வாறே இப்போது குழப்பங்களை அகற்றுவதற்கான நேரம் வந்து விட்டது. (உலகில் பரவியுள்ள குழப்பங்கள், தீமைகள் ஆகியவற்றை அகற்றுவதற்கான நேரம் வந்து விட்டது.)

அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையாளரை இழிவுபடுத்துவதிலும் அவருடன் அவமரியாதை –யாக நடந்து கொள்வதிலும் அதன் உச்சத்தை இவர்கள் அடைந்து விட்டனர். ஈ மற்றும் குளவிக்கு இருக்கும் மதிப்பு கூட பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்படவில்லை. (நஊது –பில்லாஹ்) வண்டிற்குக் கூட மனிதன் பயப்படுகின்றான். எறும்புகளிடமிருந்தும் கூட அவர் ஆபத்தை உணர்கின்றான். ஆனால் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களை தீயவர் என்று கூறுவதற்கு எவரும் தயங்குவதில்லை. كَذَّبُوا بِآيَاتِنَا அவர்கள் எமது அடையாளங்கள் பொய்ப் –படுத்தினர் என்பதை மெய்ப்பிப்பவர்களாக இவர்கள் இருக்கின்றனர். எவ்வளவு திறக்க முடியுமோ அந்த அளவு இவர்கள் தமது வாயை திறந்தனர். வாய் கிழிய ஏச்சுப்பேச்சுகளை இவர்கள் பேசினர். இறைவன் இவர்களை அகற்றுவதற்கான அந்த நேரம் உண்மையிலேயே இப்போது வந்து விட்டது. அத்தகைய தருணத்தில் அவன் எப்போதும் ஒரு மனிதரை பிறக்க வைக்கின்றான். அந்த மனிதர் அவனது மகத்துவம் மற்றும் கம்பீரத்திற்காக மிகவும் எழுச்சி உடையவராக இருக்கின்றார். அத்தகைய

மனிதருக்கு அந்தரங்க உதவியின் ஆதரவு இருக்கின்றது. உண்மையில் எல்லாவற்றையும் சுயமே அல்லாஹ்தான் செய்கின்றான். ஆனால், அவன் ஒருவரை பிறக்கச் செய்வது அவனது நடைமுறைய நிறைவேற்றுவதாக இருக்கின்றது. وَلَنْ تَجِدَ لِسُنَّةِ اللّٰهِ تَبْدِيْلًا (அல்லாஹ்வின் நடைமுறையில் நீர் எந்த மாற்றத்தையும் காணமாட்டீர்).

தனது நடைமுறைக்கு ஏற்ப அல்லாஹ் என்னை அனுப்பிய அந்த நேரம் வந்து விட்டது என்று அவர்கள் கூறுகின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: இறைவனின் இயற்கை சட்டத்தின் மீது பார்வையை செலுத்தும்போது விஷயம் எல்லையைத் தாண்டிச் செல்கின்றபோது வானத்தில் ஆயத்தம் செய்யப்படுகின்றது என்பது தெரிய வருகின்றது. ஆயத்தம் செய்வதற்கான நேரம் வந்து விட்டது என்பதே இதன் அடையாளமாக இருக்கின்றது. உண்மையான நபி முஜத்தித் (சீர்திருத்தவாதி) மற்றும் தூதரின் பெரும் அடையாளம் இதுவேயாகும். அப்போது அவர்கள் குறித்த நேரத்தில் வருகின்றனர். தேவையிருக்கின்ற சமயத்தில் வருகின்றனர். வானத்தில் ஏதாவது ஆயத்தம் செய்யப்படு –வதற்கான தருணம் இதுவல்ல என்று மக்களால் ஆணையிட்டுக் கூற முடியுமா?

அந்த காலத்தில் மட்டுமல்ல. இன்றும் கூட மக்கள் ஒரு சீர்திருத்தவாதியின் தேவை எங்களுக்கு இருக்கின்றது என்றே கூறுகின்றனர். மாறாக, பாகிஸ்தானில் சுயமே மவ்லவிகளே இதை கூறுகின்றனர். ஆனால், வாக்களிக்கப்பட்ட மஸீஹை மறுக்கின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் வையுங்கள். எல்லாவற்றையும் சுயமே அல்லாஹ்வே செய்கின்றான். நாமும் நமது ஜமாஅத்திலுள்ள அனைவரும் அறைகளில் அமர்ந்து விட்டாலும் கூட பணி நடந்து விடும். மேலும், தஜ்ஜாலுக்கு வீழ்ச்சி ஏற்பட்டு விடும். تِلْكَ الْاَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ (இந்த நாட்கள் மக்களிடம் திரும்பத் திரும்ப வருகின்றன) தஜ்ஜால் உச்சத்தில் இருப்பது, நாட்கள் இப்படித்தான் மாறிக் கொண்டிருக்கின்றன என்பதை உணர்த்துகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: அவன் உச்சத்தில் இருப்பது அவனது வீழ்ச்சியின் நேரம் அருகில் இருக்கின்றது என்பதை தெரிவிக்கின்றது. ஒருவர் உச்சத்தை அடைந்து விட்டால், மேலும் அவர் நான் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக ஆகி விட்டேன். எல்லாம் எனது கைகளில் வந்து விட்டது என்று தன்னைப் பற்றி கருத ஆரம்பித்து விட்டால் உச்சத்திற்கு சென்ற பிறகு அங்கிருந்து அவரது வீழ்ச்சி ஆரம்பமாகி விடுகின்றது.

இவ்வாறே இந்த சக்திகளின் வீழ்ச்சியும் ஆரம்பமாகி விட்டது. இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் அல்லது எவர்கள் அஹ்மதியத்திற்கு எதிராக அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக செயல்படுகின்றனரோ அவர்களது வீழ்ச்சி ஆரம்பமாகி விட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: அவனது உயர்வு அவன் கீழே வரப் போகின்றான் என்பதை வெளிப்படுத்துகின்றது. அவன் குடியேறுவது அவனது அழிவின் அடையாளமாகும். எனினும் குளிர்ந்த காற்று வீச ஆரம்பித்திருக்கின்றது. அல்லாஹ்வின் பணிகள் மெதுவாகத்தான் நடக்கின்றன.

சரிதான். அடையாளங்கள் தெரிவது ஆரம்பமாகி விட்டது. அல்லாஹ்வின் பணிகள் மெதுவாகத்தான் நடக்கின்றன. அவை நிறைவேறும் – இன்ஷா அல்லாஹ்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நம்மிடம் எந்தவோர் அடையாளமும் இல்லாமல் இருந்தாலும் கூட நாம் காலத்தின் நிலைமைகள் மீது பார்வையைச் செலுத்தியவாறு மஸீஹ் இதுவரை சிலுவையை முறிப்பதற்கு ஏன் வரவில்லை? என்று அவரை தேடி பைத்தியக்காரர்களைப் போன்று திரிவது முஸ்லிம்கள் மீது கடமையாக இருக்கின்றது. அவர்களுக்கிடையில் நடைபெறும் சண்டைகளில் தீர்த்து வைப்பதற்கு அவரை அவர்கள் அழைத்திருக்கக் கூடாது.

இஸ்லாத்தின் மீது தன்மான உணர்வு இருந்திருந்தால் இஸ்லாத்தை தற்காத்து கொள்வதற்காக மஸீஹை அவர்கள் அழைத்திருக்க வேண்டும். தங்களுக்கிடையில் நடக்கின்ற சண்டைகளை தீர்த்து வைப்பதற்காக அவரை அழைத்திருக்கக் கூடாது.

அன்னார் கூறுகின்றார்கள்: ''அவரது பணி சிலுவையை முறிப்பதாகும். அதுதான் காலத்திற்கு தேவைப்படுகின்றது.''

தொடர்ந்து கூறுகின்றார்கள்: நாத்திகம் எல்லா இடங்களிலும் பரவி விட்டது. அதை மறுப்பதற்கே நான் வந்துள்ளேன்'' (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 28; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

மேலும் இதனை விளைக்கியவாறு ஓரிடத்தில் அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: இதனால்தான் அவரது பெயர் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றது. முல்லாக்களின் கண்களுக்கு முன்னால் மனித இனத்தின் நன்மை மற்றும் வளர்ச்சி ஆகியவை இருந்திருந்தால் அதை அவர்கள் கருத்தில் கொண்டிருந்தால் நம்மிடம் நடந்து கொள்வது போன்று அவர்கள் ஒருபோதும் நடந்து கொண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் நமக்கு எதிராக ஃபத்வாக்களை எழுதி எதை உருவாக்கியுள்ளார்கள் என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டும். எதைப் பற்றி இறைவன் ஆகுக என்று கூறுகின்றானோ அது ஆகக் கூடாது என்று எவரால் கூற முடியும்?

ஃபத்வாக்களை எழுதியதனால் என்ன பலன் கிடைத்தது? ஜமாஅத் அவ்வாறே முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது. இறைவனே ஒன்றைப் பற்றி அது ஆகி விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டால் அது ஆகி விடுகின்றது. பிறகு யாரும் அதை தடுக்க முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள்: நமது எதிரிகளும் கூட நமது தொண்டர்களாகவும் ஊழியர்களாகவும் இருக்கின்றனர். ஏதாவதொரு வகையில் நம்மைப் பற்றிய விஷயத்தை கிழக்கிலும் மேற்கிலும் இவர்கள் சென்று சேர வைக்கின்றனர். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 398; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எதிர்ப்புகளின் மூலமாக அஹ்மதிய்யத் அதாவது, உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை இவர்கள் மற்றவர்கள் வரை கொண்டு சேர்க்கின்றனர். ஏனென்றால் இவ்வாறும் மக்களுக்கு கவனம் உருவாகின்றது. பல மக்களும் கடிதங்கள் எழுதுகின்றனர். மேலும் நம்மை தொடர்பு கொள்கின்றனர். இந்த மவ்லவி உங்களை எதிர்ப்பதன் காரணமாகவும் இந்த இடத்தில் உங்களுக்கு எதிராக விஷயங்கள் பேசப்பட்டதன் காரணமாகவும் எங்களுக்கு இதைப் பற்றி அறிய வேண்டும் என்ற தேட்டம் ஏற்பட்டது. நாங்கள் இது பற்றி ஆய்வு செய்ய ஆரம்பித்தோம் என்று கூறுகின்றனர். இப்போது இணையதளம் மூலமாக எல்லா இடங்களிலும் ஜமாஅத்தின் நூல்கள் இருக்கின்றன. பல விஷயங்களும் கிடைக்கின்றன. அதன் மூலம் பலவற்றையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். எனவே, நன்றாக ஆராய்ந்து பார்த்த பிறகு நாங்கள் ஜமாஅத்தில் இணைய விரும்புகின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். எதிரிகளின் எதிர்ப்பும் கூட தப்லீகிற்கான வழியாக ஆகிக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் இஸ்லாத்தின் போதனைகளுக்கு ஏற்ப செயல்படுகின்றோம். முதலிலேயே இந்த அளவு அதிகமாக பிரிவுகள் இருக்கின்றன. பிறகு ஒரு புதிய பிரிவை ஏற்படுத்த வேண்டிய தேவை என்ன? அவர்களின் ஜமாஅத்தில் இணைய வேண்டிய தேவை என்ன? என்ற ஆட்சேபனைக்கு பதில் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நமது அஹ்மதிகள் கூட ஆட்சேபனை செய்பவர்களின் இந்த கூற்றுக்களைக் கேட்டு விட்டு அமைதியாக இருந்து விடுகின்றனர். (இன்னும் கூட என்ன பதில் கூற வேண்டும் என்று தெரியாமல் இவ்வாறு அமைதியாக இருக்கின்ற சிலர் இருக்கின்றனர்.)

அன்னார் கூறுகின்றனார்கள்: பல மக்களும் இந்த இயக்கத்தின் தேவை என்ன? நாங்கள் தொழவில்லையா? நோன்பு பிடிக்கவில்லையா? என்று கேட்டு இவ்வாறு அவர்கள் ஏமாற்றுகின்றனர். அத்தகைய விஷயங்களைக் கேட்டு அது பற்றி தெரியாமல் இருக்கின்ற மக்கள் ஏமாந்து விடுகின்றனர் என்பதில் எவ்வித வியப்பும் இல்லை. அவர்களுடன் சேர்ந்து இவர்களும் நாம் தொழுகின்றோம், நோன்பு வைக்கின்றோம். திரும்பத் திரும்ப சில திக்ருகளைக் கூறுகின்றோம். பிறகு ஏன் நமக்கிடையில் இந்த பிளவு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது? என்று அவர்கள் கேட்கின்றனர். (புதிய பிரிவை ஏற்படுத்தி ஏன் பிளவை ஏற்படுத்த வேண்டும்? என்று கேட்கின்றனர். உங்களுடன் வந்து சேர்வதற்கான தேவை என்ன வந்து விட்டது? என்று கேட்கின்றனர். குழுப்பத்தை ஏன் ஏற்படுத்த வேண்டும்? என்று கேட்கின்றனர்.)

அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். அத்தகைய விஷயங்களை குறைவான புரியும் திறன் மற்றும் ஞானம் இல்லாததன் காரணமாகவே அவர்கள் பேசுகின்றனர். இந்த பிளவை ஏற்படுத்துவது எனது பணியல்ல. இந்த பிளவு ஏற்படுத்தப்பட்டிருக் –கின்றது என்றால் அல்லாஹ்தான் அதை ஏற்படுத்தியுள்ளான். அவனே இந்த இயக்கத்தை நிலைநாட்டியுள்ளான்.

நான் இந்த இயக்கத்தை நிறுவவில்லை. மாறாக, அல்லாஹ்தான் இதனை நிலைநாட்டி –யுள்ளான். ஏனென்றால் ஈமானின் நிலைமை பலவீனமடைந்து ஈமானிய ஆற்றல் முற்றிலுமே இல்லாத நிலைமை வரை சென்று விட்டது. உண்மையான ஈமானின் ஆன்மாவை ஊத இறைவன் விரும்புகின்றான். இந்த இயக்கத்தின்

மூலமாக அவன் அதை செய்ய விரும்புகின்றான். அத்தகைய நிலைமையில் அம்மக்களின் ஆட்சேபனை தேவையற்றதும் பொருத்தமற்ற வீணான ஆட்சேபனையாக இருக்கின்றது.

எனவே, நினைவில் கொள்ளுங்கள். அதுபோன்ற சந்தேகம் ஒருபோதும் எவரது உள்ளத்திலும் வரவே கூடாது. முழுமையாக கவனமாக சிந்தித்துப் பார்த்தால் இந்த சந்தேகம் எழவே முடியாது. கவனமாக சிந்திக்காததன் காரணமாகத்தான் சந்தேகம் வருகின்றது. அவர்கள் வெளிப்படையான நிலைமைகளைப் பார்த்து விட்டு மற்ற முஸ்லிம்களும் இருக்கின்றனர் என்று கூறி விடுகின்றனர். இது போன்ற சந்தேகங்களால் மனிதன் விரைவில் அழிந்து விடுகின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவ்வகையைச் சார்ந்த மக்களின் சில கடிதங்களை நான் பார்த்திருக்கின்றேன். வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்கள் நமது ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைந்திருக்கின்றனர். அவர்கள் கூறுகின்றனர். ஏனைய முஸ்லிம்கள் தொழுகின்றனர். கலிமா கூறுகின்றனர். நோன்பு வைக்கின்றனர். நல்ல பணிகளைச் செய்கின்றனர். நல்லவர்களாக தெரிகின்றனர். பிறகு இந்த புதிய இயக்கத்தின் தேவை என்ன வந்து விட்டது? என்று எங்களிடம் கேட்கப்படுகின்றது என்று கூறுகின்றனர்.

இந்த மக்கள் நமது ஜமாஅத்தில் இணைந்திருந்தும் கூட அத்தகைய ஆட்சேபனை –களையும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற விஷயங்களையும் கேட்டு விட்டு எங்களுக்கு இந்த கேள்விக்கு பதில் கூற முடியவில்லை என்று எனக்கு எழுதுகின்றனர். அத்தகைய கடிதங்களைப் படித்து விட்டு அத்தகைய மக்கள் பற்றி எனக்கு வருத்தம் ஏற்படுகின்றது. அவர்கள் மீது கருணை ஏற்படுகின்றது. அவர்கள் நமது அசல் நோக்கத்தையும் குறிக்கோள்களையும் புரிந்து கொள்ளவில்லை.

சடங்கு என்ற ரீதியில் இம்மக்கள் நம்மை போன்றே இஸ்லாமிய வழிமுறைகளைப் பேணுகின்றனர் என்பதையும் இறைவன் கூறியுள்ள கடமைகளை அவர்கள் நிறைவேற்று –கின்றனர் என்பதையும் மட்டும் அவர்கள் பார்க்கின்றனர். ஆனால் உண்மையின் ஆன்மா அவர்களிடம் இருப்பதில்லை. கடமை என்ற அளவில் வெளிப்படையாக மட்டும் இவற்றை செய்தால் போதாது. மாறாக, உண்மையான முறையில் இறைவணக்கத்தையும் மற்ற கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும். எனவேதான் இந்த விஷயங்களும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற கூற்றுகளும் சூனியம் போன்று அவர்களிடம் அதன் விளைவைக் காட்டுகின்றன. அந்த தருணத்தில் உண்மையான ஈமானை நாம் உருவாக்க வேண்டும் என்பதை பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. அது மனிதனை பாவத்தின் மரணத்திலிருந்து காப்பாற்றுகின்றது. இந்த சடங்குகளைப் பின்பற்றி நடக்கின்ற மக்களிடம் அந்த விஷயம் இருப்பதில்லை. அவர்களது பார்வை வெளிப்படையானவற்றின் மீதே இருக்கின்றது. உண்மையின் பக்கம் அவர்களின் பார்வை இருப்பதில்லை. அவர்களின் கையில் தோல் இருக்கின்றது. ஆனால் அதில் சத்து இருப்பதில்லை. (மல்.ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 237-239; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) எனவே, வெளிப்படையான செயல்களில் முஸ்லிம்களும் ஈடுபடுகின்றனர். ஆனால் அவற்றின் ஆன்மா அவர்களிடம் இல்லை. தக்வா அவர்களிடம் இல்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக் கொள்பவர்களின் செயல்கள் பொருத்தமான நற்செயல்களாக இருந்தால், பிறகு அதன் தூய விளைவுகள் ஏன் உருவாகுவதில்லை?

இந்த விஷயத்தை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: நம்மிடம் இஸ்லாத்திற்கு மாற்றமான எந்த விஷயம் இருக்கின்றது? என்பதை இம்மக்கள் (அதாவது முஸ்லிம்களில் சிலர்) புரியாமல் இருக்கின்றனர். நாம் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுகின்றோம். தொழுகைகளை நிறைவேற்றுகின்றோம். நோன்பின் நாட்களில் நோன்பும் நோற்கின்றோம். ஸக்காத்தும் கொடுக்கின்றோம். அவ்வாறே நாங்களும் செய்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். இஸ்லாத்தின் உண்மைக்கு மாறுபட்ட எந்த செயலையும் நாங்கள் செய்யவில்லை என்கின்றனர்.

ஆனால், அவர்களது செயல்கள் பொருத்தமான நற்செயல்களாக இல்லை என்று நான் கூறுகின்றேன். மாறாக, அது சத்து இல்லாத தோல் மட்டும் இருக்கின்ற பழமாக இருக்கின்றது. அது அல்லாமல் இன்று பொருத்தமான நற்செயல்களாக இருந்தால் பிறகு அவற்றின் தூய விளைவுகள் ஏன் உருவாகாமல் இருக்கின்றது?

எல்லா வகையான குழப்பம் மற்றும் கலப்படத்திலிருந்து அந்த செயல்கள் தூய்மையாக இருக்கும்போதுதான் அவை பொருத்தமான நற்செயல்களாக இருக்க முடியும். ஆனால், அவர்களிடம் இந்த விஷயம் எங்கு இருக்கின்றது, ஒருவர் நம்பிக்கை கொண்டவராகவும் இறையச்சமுள்ளவராகவும் இருந்து பொருத்தமான நற்செயல்களைச் செய்பவராகவும் இருந்து உண்மையின் எதிரியாகவும் அவர் இருப்பார் என்பதன் மீது ஒருபோதும் என்னால் உறுதி கொள்ள முடியாது. இந்த மக்கள் நம்மை சுதந்திரமாக செயல்படுபவர்கள் என்றும் நாத்திகர்கள் என்றும் கூறுகின்றனர். ஆனால் இறைவனுக்கு அவர்கள் அஞ்சுவதில்லை.

அல்லாஹ் என்னை தூதராக நியமித்து அனுப்பியுள்ளான் என்று நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறியுள்ளேன். அவர்களது உள்ளத்தில் அல்லாஹ்வின் மகத்துவம் சிறிதளவு இருந்திருந்தால் அவர்கள் என்னை மறுத்திருக்க மாட்டார்கள். நாம் இறைவனின் பெயரை குறைத்து விடக் கூடியவர்களாக ஆகிவிடக் கூடாதே என்று அவர்கள் அஞ்சியிருப்பர். அவர்களிடம் அல்லாஹ்வின் மீது உண்மையான மற்றும் அசல் ஈமான் இருக்கும்போதுதான் இது நடக்க முடியும். மேலும் அவர்கள் தண்டனை கிடைக்கும் நாளுக்கு அஞ்ச வேண்டும். மேலும் நீங்கள் அறியாததை நீங்கள் பின்பற்றிச் செல்ல வேண்டாம் என்பதற்கு ஏற்ப அவர்கள் செயல்பட வேண்டும். (மல்.ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 343; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்களின் தாக்குதல்களிலிருந்து இஸ்லாத்தை பாதுகாப்பது தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் நோக்கமாகும் என்பதை எடுத்துக் கூறியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதிக் காலம் தொடர்பாக அந்த நேரத்தில் இரு வகையான குழப்பங்கள் ஏற்படும் என்று தெரிவித் –திருந்தார்கள். ஒன்று, உட்புற குழப்பங்கள்; மற்றொன்று, வெளிப்புற குழப்பங்களாகும்.

உட்புற குழப்பம் என்பது முஸ்லிம்கள் உண்மையான நேர்வழியில் நிலைத்திருக்க மாட்டார்கள் என்பதாகும். ஷய்த்தானின் செயல்கள் மற்றும் அவனது ஊடுருவலுக்கு கீழே அவர்கள் வந்து விடுவர். அவர்களிடம் எந்தவொரு பொருத்தமான நற்செயலும் இருக்காது. சூதாட்டம், விபச்சாரம், மது அருந்துதல் மற்றும் எல்லா விதமான குழப்பங்கள் மற்றும் தீமைகளில் ஈடுபட்டு அல்லாஹ் ஏற்படுத்தி இருந்த வரம்புகளை விட்டும் அவர்கள் வெளியேறி விடுவர். இறைவன் தடுத்தவற்றிலிருந்து விலகியிருப்பதை சிறிது பொருட்படுத்தாமல் அவர்கள் இருப்பர். தொழுகையையும் நோன்பையும் அவர்கள் கை விட்டு விடுவர். இறை கட்டளைகளை அவமதிக்கின்ற நிலை இருக்கும். திருக்குர்ஆனின் கட்டளைகளை எள்ளி நகையாடி அவற்றை பரிகாசம் செய்கின்ற நிலை இருக்கும். இவை உட்புற குழப்பங்களாகும். அதாவது முஸ்லிம்களின் செயல் அளவிலான நிலைமையில் சீர்குலைவு ஏற்பட்டு விடும். பெரும்பாலும் முஸ்லிம்களின் நிலை உலகில் இவ்வாறுதான் இருந்து வருகின்றது. அவர்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது எவ்வாறு அநீதி இழைக்கின்றனர் என்பதை நாம் பார்க்கின்றோம்.

வெளிப்புற குழப்பம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களின் தூய இருப்பின் மீது பொய்யான விஷயங்கள் புனைந்து கூறப்படும். இந்த விஷயமும் இன்றைய நாட்களில் அதிகமாக நடக்கின்றன.

எல்லா வகையான உள்ளத்தை புண்படுத்துகின்ற தாக்குதல்கள் மூலமாக இஸ்லாத்தை இழிவுபடுத்துவதற்கும் அதை அழிப்பதற்கும் முயற்சிகள் செய்யப்படும். மஸீஹ் இறைவனாக இருக்கின்றார் என்பதை நம்ப வைப்பதற்கும் அவரது சாபத்திற்குரிய சிலுவை மரணம் மீது நம்பிக்கை கொள்ள வைப்பதற்கு எல்லா விதமான தந்திரங்களும் சூழ்ச்சிகளும் கையாளப்படும்.

சுருக்கமாக, இந்த இரு வகையான உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்களை சீர்திருத்து –வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இதற்காக ஒரு நபர் அவர்களது உம்மத்திலிருந்து எழுப்பப்படுவார். அவர் வெளிப்புற குழப்பங்கள் அதாவது சிலுவை மார்க்கத்தின் குழப்பங்களை அகற்றுபவராக இருப்பார். இந்த வகையில் அவர் மர்யமின் மகனான ஈஸாவாக இருப்பார். உட்புற பிளவுகளையும் தவறாக வழிகளையும் அகற்றி நேர்வழியின் உண்மையான பாதையை அவர் நிலைநாட்டுவார். இதனால் அவர் மஹ்தி என்று அழைக்கப்படுவார் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் நற்செய்தி கூறியுள்ளார்கள். இந்த நற்செய்தியின் பக்கமே وَاٰخَرِيْنَ مِنْهُمْ என்ற வசனத்திலும் சைகையாக சுட்டிக் காட்டப்பட்டிருக் –கின்றது. (மல்.ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 444-445; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருக்

-கின்றோம். அல்லாஹ்வுடன் நமக்கு இருக்கும் தொடர்பும் நமது தக்வாவின் தரமும் மற்ற முஸ்லிம்களை விட உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். அவர்கள் பொதுவாக படம்பிடித்துக் காட்டியுள்ள அந்த விஷயங்கள் நம்மிடம் இருக்கக் கூடாது. நமது செயலளவிலான நிலைமை மற்றவர்களை விட சிறந்ததாக இருக்க வேண்டும். நமது செயல்கள் இறைவனின் திருப்தியைப் பெறும் வகையில் நற்செயல்களாக இருக்க வேண்டும்.

இந்த விஷயத்தை விளக்கியவாறு அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் பைஅத் செய்து விட்டு இந்த இயக்கம் உண்மையானது என்பதை மட்டும் ஏற்றுக் கொள்வது போதுமானதல்ல. இவற்றை ஏற்றுக் கொள்வதனால் மட்டும் இறைவன் மகிழ்ச்சியடைந்து விடுவதில்லை. இந்த இயக்கத்தில் இணைந்திருப்பதனால் நல்லவராக ஆகுவதற்கு முயற்சி செய்யுங்கள். இறையச்சம் உள்ளவராக ஆகுங்கள். ஒவ்வொரு தீமையில் இருந்தும் விலகியிருங்கள். இந்த சமயத்தை துஆக்கள் செய்தவாறு கழியுங்கள். இரவு பகலாக இறைவனிடம் மன்றாடுவதில் ஈடுபடுங்கள். சோதனையின் சமயம் வரும்போது இறைவனின் கோபமும் அதிகமாக வெளிப்படுகின்றது. அத்தகைய தருணத்தில் துஆக்கள் செய்வது, மன்றாடுவது மற்றும் ஸதகா வழங்குவது ஆகியவற்றை செய்யுங்கள். நாவை மென்மையாக வைத்திருங்கள். இஸ்திக்ஃபார் செய்வதை உங்களது அன்றாட வழக்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். தொழுகைகளில் துஆக்கள் செய்யுங்கள்.

உழைக்கின்ற நிலையில் எவரும் மரணிப்பதில்லை என்ற புகழ்பெற்ற ஒரு கூற்று இருக்கின்றது. வெறுமனே நம்பிக்கை கொள்வது மனிதனுக்கு பயன் தராது. மனிதன் நம்பிக்கை கொண்ட பிறகு அதனை முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டால் பிறகு அதனாலும் எந்த பயனும் ஏற்படாது. இதற்கு பிறகு பைஅத் செய்ததனால் எந்த பயனும் ஏற்படவில்லை என்று புகார் கூறுவது வீணான செயலாகும். அல்லாஹ் வெறுமனே வார்த்தைகளால் மட்டும் திருப்தி அடைந்து விட மாட்டான்.

ஒவ்வொரு பொருத்தமான நற்செயலையும் புகழ்ந்து கூறியவாறு பொருத்தமான நற்செயல்கள் என்றால் என்ன? என்பது பற்றி ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் திருக்குர்ஆனில் நன்னம்பிக்கையுடன் நற்செயல்-களையும் வைத்துள்ளான். எதில் ஓர் அணுவளவு கூட குழப்பம் இருக்காதோ அதனையே அமலே சாலிஹ் அதாவது பொருத்தமான நற்செயல் என்று நாம் கூறுகின்றோம். நினைவில் கொள்ளுங்கள். மனிதனின் செயல்கள் மீது எப்போதும் திருடர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். அவ்வாறு அவை திருடப்படுகின்றன?

வெளி வேஷம் அதாவது பிறருக்குக் காட்டுவதற்கான மனிதன் ஒரு செயலைச் செய்வது, அந்த செயலைச் செய்து விட்டு சுயமே அவன் மகிழ்ச்சியடைவது, பல வகையான தீய செயல்கள் மற்றும் அவனிடமிருந்து நிகழ்கின்ற பாவங்கள் ஆகியவற்றால் செயல்கள் பொய்யானதாக ஆகி விடுகின்றது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: பொருத்தமான நற்செயல் எதுவென்றால் அதில் அநீதியிழைப்பது, நன்மை செய்து விட்டு அதில் சுயமே தானே திருப்தியடைந்து விடுவது, வெளி வேஷம், கர்வம் மற்றும் மனிதனின் உரிமைகளைப் பறிப்பது ஆகியவை தொடர்பான எண்ணமே இருக்காது. எவ்வாறு நற்செயல்களைச் செய்வதன் மூலமாக மனிதன் மறுமையில் தப்பி விடுகின்றானோ அவ்வாறே உலகிலும் அவன் தப்பி விடுகின்றான். அதாவது மறுமையிலும் நல்ல செயல்களின் காரணமாகத்தான் நாம் நம்மை காப்பாற்றிக் கொள்வதற்கான வழிவகைகள் உருவாகும். நற்செயல்கள் நம்மிடம் இருந்தால் அல்லாஹ் நம்மிடம் திருப்தியடைவான். தனது அருட்கொடைகளை வழங்குவான். இவ்வாறு உலகிலும் நாம் நற்செயல்களைச் செய்பவர்களாக இருந்தால் பல வகையான உலக கவலைகளில் இருந்தும் துன்பங்களிலிருந்தும் மனிதன் தன்னை காப்பாற்றிக் கொள்கின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: முழு வீட்டிலும் பொருத்தமான நற்செயலைச் செய்பவர் ஒருவர் இருந்தாலும் கூட அதனால் முழு வீடும் பாதுகாக்கப்படுகின்றது. எதுவரை உங்களிடம் பொருத்தமான நற்செயல் இருக்காதோ அதுவரை நம்பிக்கை கொள்வது எந்தப் பயனையும் தராது. ஒரு மருத்துவர் ஒரு மருந்துச் சீட்டை எழுதிக் கொடுத்தால் அதன் பொருள் அதில் என்ன மருந்து எழுதப்பட்டிருக்கின்றதோ அதை வாங்கி அருந்துவதாகும். அதனை அவர் பயன்படுத்த வேண்டும். மருந்துச் சீட்டை மட்டும் வாங்கி எங்காவது வைத்து விட்டுச் சென்று விட்டால் அதனால் என்ன பயன் ஏற்படும்? இப்போது நீங்கள் தவ்பா செய்துள்ளீர்கள் என்றால் வருங்காலத்தில் இந்த தவ்பாவின் மூலமாக உங்களை எந்த அளவு நீங்கள் சுத்தப்படுத்தி-யுள்ளீர்கள் என்பதை இறைவன் பார்க்க விரும்புகின்றான். இப்போது தக்வாவின் மூலமாக உங்களை இறைவன் பிரித்தறிந்து கொள்ள விரும்புகின்ற காலமாக இது இருக்கின்றது. பல மக்களும் இறைவன் மீது புகார் கூறுகின்றனர். தமது ஆன்மாவை அவர்கள் பார்ப்பதில்லை. மனிதனின் ஆன்மாவில் அநீதியிழைத்தல் இருக்கின்றது. அது அல்லாமல் இறைவன் கருணை காட்டுபவனாகவும் பரிவுடன் நடந்து கொள்பவனாகவும் இருக்கின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில மனிதர்-களுக்கு பாவம் பற்றி தெரிந்திருக்கும். சிலருக்கு பாவம் பற்றி எதுவும் தெரியாமல் கூட இருக்கும். எனவேதான், அல்லாஹ் நிரந்தரமாக இஸ்திக்ஃபார் செய்வதை கட்டாயமாகப் பேண வேண்டும் என்று கூறியுள்ளான். இஸ்திக்ஃபார் செய்து கொண்டேயிருக்க வேண்டும். மனிதன் ஒவ்வொரு பாவத்திற்காகவும் அவை வெளிப்படையான பாவமாக அல்லது அந்தரங்க பாவமாக இருந்தாலும், அதைப் பற்றிய அறிவு அவனுக்கு இருந்தாலும் இல்லா விட்டாலும் கை, கால்கள், நாவு, காது மற்றும் கண்களின் எல்லா வகையான பாவங்களிலிருந்தும் பாவமன்னிப்புத் தேடியவாறு இஸ்திக்ஃபார் செய்து கொண்டே இருக்க வேண்டும். உடலின் எந்த உறுப்பின் மூலமாகவும் பாவம் நிகழ்ந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உடலின் ஒவ்வொரு பகுதியும் பாவத்திலிருந்து தவிர்ந்திருப்பதற்கு இஸ்திக்ஃபார் செய்து வர வேண்டும். இன்றைய நாட்களில் ஆதம் (அலை) அவர்கள் செய்த துஆவை ஓத வேண்டும். அது எந்த துஆ?

(7:24) رَبَّنَا ظَلَمْنَآ أَنفُسَنَا وَإِن لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ ٱلْخَٰسِرِينَ

இந்த துஆவானது ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. கவனமற்ற நிலையில் வாழ்க்கையைக் கழித்து விடாதீர்கள். எவர்கள் கவனமற்ற நிலையில் வாழ்வைக் கழிக்காமல் இருக்கின்றனரோ அவர்கள் அவர்களது சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு துன்பத்தில் ஆழ்ந்து விடுவார் என்று ஒருபோதும் நாம் எதிர்பார்க்க முடியாது. எந்தவொரு துன்பமும் இறைவனின் அனுமதி இல்லாமல் வருவதில்லை. இது பற்றி எனக்கு இந்த துஆ இல்ஹாம் ஆக வந்திருக்கின்றது.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِي وَانْصُرْنِي وَارْحَمْنِي

அன்னார் கூறுகின்றார்கள்: எல்லாம் அவனது கைகளில் இருக்கின்றது என்பதே நமது ஈமான் ஆகும். அவற்றை அவன் காரணிகள் மூலமாக செய்தாலும் அல்லது காரணிகள் எதுவும் இல்லாமல் செய்தாலும் சரியே. (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 274-276; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) ஏதாவது ஓர் ஊடகத்தை அல்லது வழியை அல்லாஹ் ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தா விட்டாலும் அனைத்துமே அல்லாஹ்வின் கைகளில்தான் இருக்கின்றது.

இந்த இரண்டு துஆக்களைச் செய்வதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள். ஒவ்வோர் அஹ்மதியும் நம்மில் ஒவ்வொருவரும் இதனை ஆய்வு செய்ய வேண்டும். அதாவது நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டிருக்-கின்றோம் என்றால் பிறகு அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கான உரிமையையும் பைஅத்திற்கான உரிமையையும் செலுத்துபவர்களாக நாம் இருக்கின்றோமா? என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். பெரும்பாலும் ஆய்வு செய்து பார்க்கும்போது இந்த விஷயம் நமக்கு முன்னால் வருவதை நான் பார்த்துள்ளேன். அதாவது நம்மில் பலரும் தொழுகைகளைக் கூட முழுமையாக நிறைவேற்றுபவர்களாக இருப்பதில்லை. தொழுகைகளின் பக்கம் கவனமே இருப்பதில்லை. சிலருக்கு இஸ்திக்ஃபார் செய்வதன் பக்கம் முற்றிலுமாக கவனமில்லாமல் இருக்கின்றது. பரஸ்பரம் நமக்கிடையில் ஒருவர் மற்றவரது உரிமையைச் செலுத்துவதன் பக்கம் கவனம் இருப்பதில்லை. இவை நமது நிலைமைகளாக இருந்தால் நாம் பொருத்தமான நற்செயல்களைச் செய்பவர்களாக இருக்கின்றோம் என்று நம்மைப் பற்றி எவ்வாறு கூற முடியும்? மேலும் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததற்கான உரிமையைச் செலுத்துபவர்களாக இருக்கின்றோம் என்று எவ்வாறு நாம் கூற முடியும்? மற்றவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் பாவிகளாக ஆகுகின்றனர். நாம் அவர்களை ஏற்றுக் கொண்டு பிறகு நம்மிடம் மாற்றத்தை ஏற்படுத்தாமல், ஓர் உடன்படிக்கையை செய்து விட்டு அதனை நிறைவேற்றாமல் இருந்து பாவிகளாக ஆகுகின்றோம்.

எனவே, மிகவும் கவலையுடன் நம்மில் ஒவ்வொருவரும் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே, சடங்கு என்ற ரீதியில் மஸீஹ் மவ்வூது தினத்தை கொண்டாடுபவர்களாக நாம் இல்லாமல் அன்னாரை ஏற்றுக் கொண்டதற்கான உரிமையைச் செலுத்துபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. எல்லா விதமான உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்களிலிருந்து

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான்.**
(16:129)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)*

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)*

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)*

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)*

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். *(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 122-125)*

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)*

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)*

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். [22:40]**

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. *(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)*

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. *(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)*

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)*

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 26 April 2018 Issue No. 17

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(14-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

தவிர்ந்திருப்பவர்களாக நாம் ஆவோமாக. அல்லாஹ் எப்போதும் நம்மை அவனது அடைக்கலத்தின்கீழ் வைப்பானாக. மேலும் ஒவ்வொரு சோதனையிலிருந்தும் துன்பத்திலிருந்தும் அவன் நம்மை காப்பாற்றுவானாக.

இன்று இந்த அறிவிப்பும் இருக்கின்றது. இது ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். காதியானிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த அல் ஹகம் பத்திரிகை மீண்டும் 1934 –ல் வெளியிடப்பட்டது. பிறகு மீண்டும் அது நிறுத்தப்பட்டு விட்டது. இன்று ஆங்கில மொழியில் அது இங்கிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் காலத்தில் வெளிவந்த முதல் பத்திரிகையாக இருந்தது. இது பிரிண்டில் குறைந்த எண்ணிக்கையில் வெளியிடப்படும். ஆனால் Internet -ல் அது Available ஆக இருக்கும். குத்பாவிற்குப் பிறகு இந்த Website –ல் அது உங்களுக்கு கிடைக்கும். **www.alhaqam.org**

இவ்வாறே Mobile Phone மற்றும் Tablets போன்றவற்றிற்கு Alhakam என்ற பெயரில் App –ம் கிடைக்கும். அதை Download செய்து பத்திரிகையை எளிதாக படிக்க முடியும். இந்த App புகழ்பெற்ற Mobile Phone System ஆன Apple மற்றும் Android –ல் Download செய்யும் வகையில் குத்பாவிற்குப் பிறகு உடடினயாக உங்களுக்கு கிடைத்து விடும். இந்த இதழிலுள்ள பக்கங்கள் மஸீஹ் மவ்ஊது தினம் தொடர்பாக சிறப்பிதழாக வெளியிடப்படுகின்றது. இனி ஒவ்வொரு ஜுமுஆவிலும் புதிய இதழின் பதிப்பு Upload செய்யப்படும். பிரிண்டில் மிகக் குறைவான எண்ணிக்கையில் தான் இது வெளியிடப்படும். எந்நிலையிலும் மக்கள் இதிலிருந்து பலன் பெற முடியும். இம்முறை இது தொடர்ந்து நடந்து வருகின்ற ஒரு பத்திரிகையாக நீடித்திருக்கும்படி அல்லாஹ் செய்வானாக. இது ஆங்கில மொழியில் வெளியிடப்படுவதால் ஆங்கிலம் தெரிந்தவர்கள் இதிலிருந்து அதிகமதிகமாக பலன்பெற வேண்டும்.

★ ★ ★ ★ ★

*(7-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

இவருக்கு இரு மனைவியர் இருந்தனர். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் வஃபாத் ஆன போது கிலாஃபத் கமிட்டியில் இவர் ஓர் உறுப்பினராக இருந்தார். யூ.கே –வில் ஜமாமிஆ உருவாக்கப்பட்ட போது அங்கும் இவர் ஆங்கிலம் கற்றுத் தந்தார். மிகவும் இபாதத் செய்யக்கூடியவர். தக்வாவின் படி நடப்பவர். பொறுமையும் நன்றியுணர்வும் உடையவர். இபாதத்தில் மிகவும் ஆர்வம் இருந்தது.

இவரது வீட்டினர் கூறுகின்றனர்: தினமும் தஹஜ்ஜுத் தொழக்கூடியவர். நோயுற்ற நிலையிலும் தொழுகையை விட மாட்டார். மிகவும் நல்ல குரலில் திருக்குர்ஆனை ஓதுவார். திருக்குர்ஆனில் நிறைய வசனங்கள் இவருக்கு நினைவு உண்டு. மொழிபெயர்ப்பையும் விளக்க உரையையும் கூட நினைவில் வைத்திருப்பார். மேற்கொண்டு தப்லீகிலும் தர்பிய்யத்திலும் பயன்படும் என்பதற்காக.

சில கானியர் கூறுகின்றனர்: இவரது வீட்டில் உள்ள குர்ஆனில் ஆடோ சாஹிப் தமது கைபட எழுதிய நோட்ஸ்களும் கூட காணப்படுகின்றது. 2005 இவர் தமது இரு மனைவியருடன் சேர்ந்து ஹஜ்ஜிற்கு செல்வதற்கு வாய்ப்பு பெற்றார். மிகவும் சிரித்த முகமாக இருப்பார். எளிய மனிதர். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. மக்ஃபிரத் மற்றும் ரஹ்மத்துகளுடைய நடைமுறையை இவர்களுடன் காட்டுவானாக. இவருக்கு 10 மகன்களும், மகள்களும் இருந்தனர். 23 பேரன் பேத்திகளும் உள்ளனர். இவர்களது சந்ததிகளையும் அல்லாஹ் ஜமாஅத்துடன் தொடர்புடன் வைப்பானாக. நான் கூறியது போன்று தொழுகைக்குப் பிறகு இவரது ஜனாஸா தொழுவிப்பேன்.

★ ★ ★ ★ ★

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அமர வைத்து தோட்டத்திற்கு கொண்டு வந்தனர். ஒவ்வொரு நாளும் அவர்களது உடல் மெலிந்து கொண்டே இருந்தது. இறுதியில் நான் கவனத்துடன் துஆ செய்தேன். அப்போது إِنَّ مَعِيَ رَبِّي سَيَهْدِينِ அதாவது, எனது இறைவன் என்னுடன் இருக்கின்றான் என்ன நோய் இருக்கின்றது? அதற்கான சிகிச்சை என்ன? என்பதை விரைவில் அவன் எனக்கு கூறி விடுவான் என்ற இல்ஹாம் வந்தது. இந்த இல்ஹாம் வந்து சில நிமிடங்கள் கழிந்த பிறகு இந்த நோய் ஈரலில் உள்ள சூட்டின் காரணமாக வந்திருக்கின்றது என்று எனது உள்ளத்தில் இடப்பட்டது. மேலும், ஷிஃபாவுல் இஸ்காம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ குறிப்பு இதற்கு பயனுள்ளதாக இருக்கும் என்று உள்ளத்தில் இடப்பட்டது. எனவே அந்த மருந்து தயார் செய்யப்பட்டது. அவை மாத்திரைகளாக இருந்தன. மூன்று அல்லது நான்கு மாத்திரைகளை அவர்கள் சாப்பிட்டதும் ஒரு நாள் காலை நேரத்தில் நான் கனவில் அப்துர் ரஹ்மான் என்ற பெயரையுடைய ஒரு நபர் எங்கள் வீட்டில் வந்ததையும் அவர் நின்றவாறு, காய்ச்சல் போய் விட்டது என்று கூறுவதையும் பார்த்தேன். இது வியக்கத்தக்க இறைவனின் வல்லமையாக இருந்தது. ஒருபுறம் இந்த கனவை நான் பார்த்தேன். மறுபுறம் அவர்களின் உயிர் நாடியைப் பிடித்து பார்த்தபோது காய்ச்சலின் பெயரும் அடையாளமும் இல்லாமல் இருந்தது.

**122 –வது அடையாளம்:** *30* வருடங்களுக்கு முன்னதாக ஒரு முறை நான் கனவில் பார்த்தேன். ஓர் உயரமான மேடை இருக்கின்றது. அது வீட்டிற்கு ஒப்பானதாக இருக்கின்றது. ஒருவேளை அதில் கூரை கூட இருந்திருக்கலாம். அதில் மிகவும் அழகான சிறுவன் ஒருவன் அமர்ந்திருக்கின்றான். ஏறக்குறைய அவனுக்கு ஏழு வயது இருக்கும். இவர் ஒரு மலக்கு ஆவார் என்று எனது உள்ளத்தில் தோன்றியது. அவர் என்னை அழைத்தாரா? அல்லது சுயமே நான் அவரிடன் சென்றேனா? என்பது எனக்கு நினைவில் இல்லை. ஆனால் நான் அவரது மேடைக்கு அருகில் சென்று நின்றதும் அவர் தனது கைகளில் பிடித்து கொண்டிருந்த நான்கு ரொட்டிகளுக்கு சமமான அளவில் இருந்த மின்னிக் கொண்டிருந்த ஒரு பெரிய மிகவும் சுவையான ரொட்டியை எனக்கு தந்தார். மேலும், இந்த ரொட்டி உமக்கும் உம்முடன் இருக்கின்ற தர்வேஷ்களுக்கும் உரியதாகும் என்று கூறினார். பத்து வருடங்களுக்கு பிறகு இந்த கனவு நிறைவேறி விட்டது. தூய உள்ளத்துடன் ஒருவர் காதியானுக்கு வந்து தங்கினால் இது அந்த மலக்கு தந்த ரொட்டியேயாகும் என்பது அவருக்கு தெரிந்து விடும். இரண்டு வேளை நமக்கு இது மறைவிலிருந்து கிடைக்கின்றது. குழந்தைகளை உடைய பலர் இரண்டு வேளை இங்கிருந்து ரொட்டி சாப்பிடு -கின்றனர். பல பார்வையற்றவர்களும் மாற்றுத்திறனாளிகளும் ஏழைகளும் இரண்டு வேளைக்கான ரொட்டியை இந்த லங்கர் கானா (உணவகத்திலிருந்து) கொண்டு செல்கின்றனர். மேலும் எல்லா பக்கங்களில் இருந்தும் விருந்தினர்கள் வருகின்றனர். ஒவ்வொரு நாளும் ரொட்டி சாப்பிடுபவர்களின் தோராயமான எண்ணிக்கை 200 பேர் ஆகும். சில நேரம் (அந்த எண்ணிக்கை) 300 ஆகவும் அதை விட அதிகமாகவும் இருக்கின்றது. இவர்கள் இருவேளை இந்த லங்கரிலிருந்து ரொட்டி சாப்பிடுகின்றனர். விருந்தோம்பலுக்கான ஏனைய செலவுகள் இதை தவிர்த்து ஏற்படுபவை ஆகும். மிகவும் சிக்கனமாக செலவு செய்வதால் மாதந்தோறும் தோராயமாக 1500 ரூபாய் இதற்காக செலவாகின்றது. ஆனால், மேலும் பல்வேறு செலவுகளும் இருக்கின்றன. அவை இது தவிர உள்ளவையாகும். இறைவனின் இந்த அற்புதத்தை 20 வருடங்களாக நான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அதாவது மறைவிலிருந்து நமக்கு ரொட்டி கிடைக்கின்றது. நாளை அது எங்கிருந்து வரும் என்று நமக்கு தெரியாது ஆனால் அது வந்து விடுகின்றது. இறைவா! ஒவ்வொரு நாளுக்குரிய அப்பத்தை எங்களுக்கு வழங்குவாயாக என்பது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சீடர்களின் துஆவாக இருந்தது. ஆனால், கருணைமிக்க இறைவன் துஆ இல்லாமலேயே ஒவ்வொரு நாளுக்குரிய ரொட்டியையும் நமக்கு தந்து கொண்டிருக்கின்றான். இந்த ரொட்டி உமக்காகவும் உம்முடன் இருக்கின்ற தர்வேஷ்களுக்காகவும் உரியதாகும் என்று வானவர் கூறியிருந்தது போன்றே கருணைமிக்க இறைவன் எனக்கும் என்னுடன் இருக்கின்ற தர்வேஷ்களுக்கும் ஒவ்வொரு நாளும் தன் தரப்பிலிருந்து இந்த விருந்தை அனுப்புகின்றான். எனவே, ஒவ்வொரு நாளும் அவனது புதிய விருந்து எங்களுக்கு ஒரு புதிய அடையாளமாக இருக்கின்றது.

(ஹகீகத்துல் வஹி, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 287)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad